கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

11.01.2015 - (11 தை, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 103 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /22 / NEWS / 2015

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

## "நான் இந்த அழைப்பை வரவேற்கின்றேன். ஆண்டவர் எமக்கு இந்த அருளைத் தருவார்"

POPE FRANCIS
Sri Lanka 2015

**திருத்தந்தையே! வருக வருகவென வாழ்த்தி வரவேற்கின்றோம்** **சிறப்பிதழ்**



# புன்னகை மன்னன் பூவிழிக் கண்ணன்

## திருத்தந்தை பிரான்சிஸ்

*ஆர்ஜென்டினாவின் நம்பிக்கை வித்தாய்*
*ஆர்வலர் போற்றும் இயேசு சபையின்*
*கற்பக விருட்சமாய்*
*தினமும் பேதுரு சதுக்கத்தை மக்கள் வெள்ளத்தால்*
*நிரப்பும் திருத்தந்தை பாப்பா பிரான்சிஸ்சே – நீர்*

*பஞ்சின் மென்மையை நெஞ்சில் கொண்டவர்*
*இரும்பின் வன்மையை செயலில் காட்டுபவர்*
*உள்ளத்தால் பொய்யாதொழுகி*
*உலகத்தார் உள்ளத்தில் உள்ளமானவர்*

*இன்று நேர்மையால் சீர்மை பெற்றவர்*
*வள்ளன்மையால் இளையோர்*
*உள்ளங்களை ஈர்க்கின்றவர் – ஏழைகளுக்கு*
*குன்றின் விளக்காய், குலம் தழைக்க*
*ஏழ்மையை அகற்ற நல் நண்பனாகின்றார்*

*அமைதியின் உருவமே, புன்னகை பூத்தவரே*
*அண்ணலே உமது இலங்கை வருகை – எம்மவருக்கு*
*அருள் மழை பொழியும், மனிதம் மலர்ந்திடும்*

*அயலவனை உற்று நோக்கி*
*அன்பு செய்யும் காலமாகிடட்டும்.*
*உலகத் திருச்சபை செழிப்பாய் உயர*
*உதய தாரகையாக, எளிமையாய் நற்பணியாற்ற*
*வள்ளலாய் உதித்த வரலாற்று நாயகனே – இன்று*
*வரலாறு படைக்கின்றது உமது இலங்கை வருகை*

*இலங்கையின் அப்போஸ்தலர் யோசேவ்வாஸ்*
*அடிகளாரை இறை புனிதராக*
*எம் முதற் புனிதராக, மாற்றிட இறை அருள் பாலித்த*
*நீர் வாழியவே – உதிரத்தில் மையெடுத்து இதயத்தில்*
*கிளையெடுத்து, உணர்வுகளில் ஊற்றெடுத்து*
*எழுதுகின்றோம் இனியொரு வரலாறு*

ஆக்கம் : அருட்சகோதரர் R.J. ஜெயகாந்தன்

**ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் (லூக் 6:1)**





# உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையின் கண்கண்ட தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ்

சிறப்பிதழ்



*அமைதியின் அரசரான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் விசேட தூதராகவும், அமைதியை விரும்பும் பணிவுள்ள கடவுளின் அடியாளராகவும் உள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய வருகை மகத்தானது.*

## அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை

உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையின் கண்கண்ட தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் பாப்பரசர் 2015 தை மாதம் 13ம் திகதியிலிருந்து 15ம் திகதிவரை இலங்கையைத் தரிசிப்பார். இது ஆசியப் பிராந்தியத்திற்கான திருத்தந்தையின் இரண்டாவது பயணமாகும். மேலும் இது இலங்கைக்கு மூன்றாவது முறை ஒரு பாப்பரசர் வருகை தரும் நிகழ்வுமாகும். முதலில் திருத்தந்தை 6ம் பவுல் 1970 இலும், இரண்டாவதாக திருத்ததந்தை 2ம் யோன் பவுல் 1995 இலும் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கன.

எமது சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடையவும், கொழும்பு பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையினுடையவும் அழைப்பை ஏற்றுக்கொண்டு ஆசியப் பயணத்தின் ஒரு பகுதியாக அழகிய எமது நாட்டிற்கும் திருத்தந்தை வருகை தருவது எம் அனைவருக்கும் பெருமகிழ்வை கொணரும் விடயமாகும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய வார்த்தைகளினால் சொல்வோமேயானால், “நான் இந்த அழைப்பை வரவேற்கின்றேன். ஆண்டவர் எமக்கு இந்த அருளைத் தருவார் என நினைக்கின்றேன்”.

இலங்கையிலே எமது திருத்தந்தை பெரிதும் அன்பு செய்யப்படுபவராகவும் மதித்துப் பேசப்படுபவராகவும் உள்ளார். பாப்பரசராக வந்த இச்சிறிய காலப்பகுதியிலேயே பல மக்களுடைய இதயங்களைத் தொட்டு அவர்களுக்குப் புத்துணர்வும் புதுத்தெம்பும் அளித்துள்ளார். அவரது கருணைச் செயல்களாலும் தாழ்ச்சியினாலும் ஞானத்தையும் சாதாரண வாழ்க்கை முறையையும் விரும்புவதினாலும் தான் கத்தோலிக்கர் அல்லாத பலரையும் கூட தம்பால் ஈர்த்துள்ளார்.

திருத்தந்தையின் வருகை பெரு நன்மையை நமக்குக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை. இது கடந்த கால போரின் வடுக்களையும் இன, மத, அரசியல் மற்றும் கலாச்சார வேற்றுமைகளால் ஏற்பட்ட புண்களையும் ஆற்றக்கூடிய நிலையை எமக்கு உருவாக்கித் தரும். ஆகவே, இலங்கைவாழ் அனைத்து மக்களும் இன, மத, வேற்றுமைகளைத் துறந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வரவேற்பதில் ஒன்றிணைவோம்.

மக்களின் திருத்தந்தையான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, இந்து சமுத்திரத்தின் சிறு முத்தான எமது இலங்கைக்கு வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். மிகக் குறுகிய காலத்திற்குள் மக்களின் இதயங்களில் விசேட இடம் பிடித்தவரும், அமைதியின் அரசரான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் விசேட தூதராகவும், அமைதியை விரும்பும் பணிவுள்ள கடவுளின் அடியாளராகவும் உள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய வருகை மகத்தானது.

நாங்கள் ஒரு தேசமாக 30 வருட கால போரால் மிகவும் துன்பப்பட்டோம். பங்கரமான செயற்பாடுகளினால் இன, மத, சாதி, சமூக, அந்தஸ்த்துக்கு அப்பால் ஒன்றுமே அறியாத பல அப்பாவி உயிர்களின் சேதம் சொல்லிலடங்கா. ஆயுதப் போர் முடிவு பெற்றுள்ளது. இன்று போரால் பாதிக்கப்பட்ட வாழ்க்கையை மீள்கட்டமைப்பு மற்றும் ஒப்புரவுக்கான பாதையில் நோக்கிச் செலுத்தும்போது ஏற்படும் போரை எதிர்நோக்கியுள்ளோம். ஆகவே, இப்படிப்பட்ட தருணத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய வருகை நற்பயணளிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் ஆயராகவும் அப்போஸ்தலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட புனித பேதுருவின் 266வது வழித்தோன்றலான பாப்பரசர் எமது நாட்டைத் தரிசிப்பது பெரும் பாக்கியமே ஆகும். அவருடைய பெருந்தன்மையை முன்னிட்டு நாமும் அவரைச் சூழ்ந்து நின்று வரவேற்பதோடு, இறை அருளையும் ஆசீரையும் அவர்மீது பொழியும் படியும் : எமது நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலைத்திட வேண்டியும் செபிப்போமானால் ஆண்டவர் இயேசுவின் செபமும் நிறைவேறும்: “ஆனால் உன் விசுவாசம் தளறாதபடி உனக்காக மன்றாடினேன். நீ திருந்திய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து.” (லூக்கா 22:32)

இது எமது நாட்டிற்கான பாப்பரசர் ஒருவருடைய 3வது வருகையாகும். அதேபோல ஆயிரமாம் ஆண்டில் முதலா வதுமாகும். மேலும் எளிமையை விரும்பும் திருத்தந்தை, பலவேளைகளில் சாதாரண நடைமுறைக்கு அப்பாற் சென்று ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும், மாற்றுத்திரனாளிகளான சகோதரர் -களுக்கும் அன்பையும், ஆதரவையும், உணர்வையும், அவர்களுடைய தேவைகளையும் பெற்றுக்கொடுத்து வருவது, அன்று ஆண்டவர் இயேசு (கி.பி. 1-33) எம் மத்தியில் நடந்து திரிந்த போது இடம்பெற்ற நிகழ்வகளை எமக்குச் சித்திரித்துக் காட்டுகின்றது. திருத்தந்தையுடன் நேரடியாகத் தொடர்புறும் இவர்கள் ஒரு வழியில் பாக்கியம் பெற்றவர்கள் என்றே கூறவேண்டும். ஆகவே, திருத்தந்தையை எமது நாட்டின் மரபுவழிமுறையில் வாழ்த்தி வரவேற்பதை பெருமையாகக் கருதுகின்றேன்.

### திருத்தந்தையின் இலங்கை வருகையின் முன்மொழியப்பட்ட பயணத்திட்டம்

*தை 13:*

- ☆ விமான நிலையத்தில் வைத்து இலங்கை அரச பிரதிநிதிகளால் உத்தியோக பூர்வமாய் வரவேற்கப்படுதல்.
- ☆ திறந்த மோட்டார் வண்டியில் நீர்கொழும்பு வீதியினூடாக கொழும்பை வந்தடைதல்.
- ☆ அப்போஸ்தலிக்க தூதரகத்தில் சிறிது நேரத்தை கழித்தல்.
- ☆ பேராயர் இல்லத்தில் மதிய உணவும் இலங்கை ஆயர்களோடு சந்திப்பும்.
- ☆ சனாதிபதி மாளிகையில் இலங்கை சனாதிபதியை சந்தித்தல்
- ☆ பல் சமய பிரதிநிதிகள் கூட்டம்

*தை 14:*

- ☆ காலிமுகத்திடலில் பிரதான திருவழிப்பாட்டுக் கொண்டாட்டம்
- ☆ மடுவுக்கு பயணித்து மடுத்திருப்பதியில் செப வழிபாடு
- ☆ கொழும்பிற்கு திரும்பி அப்போஸ்தலிக்க தூதரகத்தில் ஓய்வெடுத்தல்

*தை 15:*

- ☆ போளவலானை, 16ம் பெனடிக்ற் ஆசிய இறையியல் கல்வியகத்தை திறந்து வைத்தல்
- ☆ விமான நிலையத்தில் பிரியாவிடை




**திருத்தந்தையின் இலங்கைக்கான வருகையை முன்னிட்ட உத்தியோபூர்வ இணையத்தளம்**

**இவ்விணையத்தளமானது சுருக்கமாக அவரது வருகைக்கான அனைத்து விடயங்களைப் பற்றியும் எமக்கு அறியத்தரும். இடது பக்கத்தில் குறிப்பிட்டது போல் விசேடமாக திருத்தந்தையின் பயண விபரம், நினைவுகள், திருப்பலிகளின் நேரடி காட்சிப்படுத்தல், பொதுவான நிகழ்வுகள், பல சமங்களுக்கிடையிலான நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் தரப்படும்.**



ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
11, தை மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## “இலங்கையின் அப்போஸ்தலரான அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரே எம் மண்ணில் கத்தோலிக்க விசுவாசம் தழைத்தோங்க காரணமானவர் என்பதை நாம் கருத்திற்கொள்ளவோம்”

கத்தோலிக்கத் திருச்சபையின் 266வது தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வருகின்ற 13ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை இலங்கை மண்ணில் இருப்பார் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அந்நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக இவ் ஞான ஒளி பத்திரிகையானது திருத்தந்தையின் சிறப்பிதழாக வெளிவருகின்றமை பெருமைக்குரிய ஒன்றாகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அர்ஜென்டீனாவின் புவேனோஸ் ஐரேஸ் நகரில் இத்தாலியில் வடக்குப் பகுதியில் தூதரின் நகர் அமைந்துள்ள பியத்மாந்து பிரதேசத்தின் பகுதியிலிருந்து சென்று குடியேறிய இத்தாலிய பெற்றோருக்கு ஐந்து குழந்தைகளுள் ஒருவராகப் பிறந்தவர். இவரது இயற் பெயர் ஹோர்கே மாரியோ பெர்கோலியோ. கடவுள் தம்மை இயேசு சபைத் துறவறக் குருவாக அழைப்பதை உணர்ந்து இயேசு சபையில் 1958இல் புகுமுகத் துறவி நிலையில் சேர்ந்தார். 1969, மார்கழி மாதம் 13ஆம் நாள் தமது 33ஆம் வயதில் இயேசு சபையில் குத்துவப் பட்டம் பெற்றார்.

2013, பங்குனி 13ஆம் நாள் புதன்கிழமை உலக திருச்சபையின் தலைவராக உயர்த்தப்பட்டவர் தான் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். திருத்தந்தையாகத் தேர்வு பெற்ற பின் முதல் முறையாக மக்களை சந்திக்கும் போது தனக்கென ஏற்பாடு செய்திருந்த உயரமான பலகை தளத்தில் ஏறாமல் சக கர்தினால்களோடு நின்று சம அந்தஸ்தை வெளிப்படுத்தியும், முதல் முறையாக மக்களுக்கு ஆசீர் அளிப்பதற்கு முன் மக்களை பார்த்து அவர்களது ஆசீரையும் செபத்தையும் கேட்க தாழ்ச்சியோடும், பணிவோடும் தலைகுனிந்தவரும் ஆவார். இவ்வாறாக தமது வாழ்வினூடாக தினம் தினம் தாழ்ச்சி, எளிமை, அறிவு, சமூக நீதிக்காக குரல் கொடுத்தல், போன்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றார். அதுமட்டுமல்லாது ஏழைகள்பால் அன்புள்ளம் கொண்டவர். இத்தகைய நற்குணங்களைக் கொண்ட வழிகாட்டியான திருத்தந்தைக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். தூய பேதுருவின் வழுவாவரத்தோடு எம்மையும் எம் திருச்சபையையும் கட்டி எழுப்பும் இயேசுவின் கண்ணால் காணக்கூடிய தலைவராக இருக்கின்ற அவரது பணி சிறக்க தொடர்ந்து இறைவனை பிரார்த்திப்போம்

இவரது வருகையானது எமது நாட்டுக்கு இன்னுமொரு பெருமையையும் தருகின்றது என்றால் மிகையாகாது. அப்பெருமை தான் எமது நாட்டின் அப்போஸ்தலர் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரை புனிதர் நிலைக்கு உயர்த்தும் நிகழ்வாகும். அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் எமது நாட்டிற்குக் கிடைத்த மிகப் பெரிய பொக்கிஷமாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைக் கத்தோலிக்கர்கள் தமது விசுவாசப் புதுப்பித்தல் எதுவுமின்றி, ஆயனில்லாத மந்தைகள் போல் துன்பப்பட்டனர். அப்போதுதான் இலங்கை கத்தோலிக்கருக்குப் பணிபுரிய தம் வாழ்க்கையை முற்றாக அர்ப்பணிக்கும் படியாக எளிமையான ஓர் இளம் குருவாக இலங்கைக்கு வருகைதந்தார். இவரே “இலங்கையின் அப்போஸ்தலர்” என்று அன்போடு அழைக்கப்படுகின்றார். இவராலேயே இன்று எம் மண்ணில் கத்தோலிக்க விசுவாசம் தழைத்தோங்கி உள்ளது என்பதை இந்நேரத்தில் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம். இவரது புனித வாழ்வு எமக்கு உண்மையான விசுவாசத்தை ஊட்டக் கூடியதாக அமைய இறைவனை பிரார்த்திப்போம். எனவே காலிமுகத்திடலில் திருத்தந்தையினால் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் தகுதியுள்ளவர்களாக பங்கு பற்ற நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து எம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவது எமது கடமையும் பாரிய பொறுப்பும் என்பதை ஒவ்வொருவரும் மனதில் கொள்வோம்.

*இறையாசீருடன்,*
*ஆசிரியர்*



# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயம் தொடர்பான உத்தியோகப்பூர்வ நிகழ்ச்சி நிரல்

சிறப்பிதழ்

## வரவேற்பு வைபவம்

### பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில்

### 13 – 1 – 2015

8.45 : திருத்தந்தையின் வருகை

: அதை அடுத்து அப்போஸ்தலிக்க பிரதிநிதி திருத்தந்தையை வாழ்த்தி வரவேற்பார்

9.00 : திருத்தந்தையையும் அவரது குழு-வினரையும் இலங்கை சனநாயக குடியரசு சனாதிபதியும், அவரது பாரியாரும் வரவேற்று மலர் மாலை இடப்படுவார்கள்.

: கர்தினால் அதிமேதகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை திருத்தந்தையை வரவேற்பார்.

: அதை அடுத்து சனாதிபதி வெளிவிவ-கார அமைச்சரையும், ஏனைய அமைச்சர்களையும் திருத்தந்தைக்கு அறிமுகப்படுத்துவார்.

: அதை அடுத்து திருத்தந்தை ஒரு நாட்டுத் தலைவருக்குரிய இராணுவ மரியாதை வழங்கி கௌரவிக்கப்படுவார்.

9.25 : இலங்கை சனநாயக குடியரசின் தலைவராக சனாதிபதியின் வரவேற்புரை இடம்பெறும்.

9.30 : திருத்தந்தையின் பதிலுரை இடம்பெறும்

: அதை அடுத்து இலங்கையின் ஆயர்களை கர்தினால் அவர்கள் அறிமுகப்படுத்தி வைப்பார்.

9.40 : திருத்தந்தை தங்கப் புத்தகத்தில் (Golden Book) கையொப்பமிடுவார்.

9.45 : திருத்தந்தையை கொண்டு செல்லும் ரதத்தில் ஏறி பயணத்தை மேற்கொள்வார்.

11.00 : அப்போஸ்தலிக்க தூதரகத்தை அடைவார்.

## பேராயர் இல்லத்தில் ஆயர்களைச் சந்தித்தல்

1.00 : அப்போஸ்தலிக்க தூதரகத்தில் இருந்து புறப்படுதல்

1.15 : பேராயர் இல்லத்தை வந்தடைவார். கர்தினால் மற்றும் ஆயர்கள், பேராயர் இல்ல குருக்கள், குருமட மாணவர்கள் அவரை வரவேற்பார்கள்.

1.30 : திரு இருதய சிற்றாலயத்தில் சிறிய குழு செபத்திற்குப் பிறகு ஆயர்கள் அவரை வாழ்த்திய பின்பு குழு புகைப்படம் எடுக்கப்படும். பின்னர் தங்கப் புத்தகத்தில் (Golden Book) கையொப்பமிடுவார்.
பின்னர் மதிய உணவு பரிமாறப்படும்.

### 13.01.2015

## சனாதிபதி இல்லத்தில் சந்தித்தல்.

4.40 : சனாதிபதியை சந்திக்க புறப்படுதல்
: சனாதிபதியால் வரவேற்கப்படுதல்
: குடும்பத்தினரை அறிமுகப்படுத்தல்
: பரிசுகளை பரிமாறிக்கொள்ளுதல்,

5.45 : ஞாபகார்த்த முத்திரை வெளியீடு இடம்பெறும்

6.00 : BMICH நோக்கிப் புறப்படுதல்
பல்சமய (BMICHஇல்) உரையாடல்

5.15 : விருந்தினர் அனைவரும் ஒன்று கூடல்

6.15 : திருத்தந்தை வரவேற்றல்

: அதன் பின்னர் பல்சமய பெரியோர்களின் உரைகள் இடம்பெறும்.

: அதன் பின் 6.50க்கு திருத்தந்தையின் உரை பல்சமய தலைவர்களை வாழ்த்தி விடைபெறல்

*தொடர்ச்சி 15ம் பக்கம்*

## உண்மை உறைக்கும்

கமிலஸ்






01. நூற்று இருபது கோடி மக்கள் தொகை கொண்ட கத்தோலிக்கர்களின் தலைவரே "போப்பாண்டவர்" அல்லது "போப்" எனப்படும் திருத்தந்தை

02. பாப்பிறை, போப்பாண்டவர், பாப்பரசர், திருத்தந்தை என்பன ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவரைக் குறிக்கும் பெயர்கள் ஆகும்.

03. திருத்தந்தை, புனித பேதுருவின் வழித் தோன்றலாகக் கருதப்படுகிறார்.

04. கிரேக்கத்தில் பாப்பாஸ் (Pappas) என்றும், இலத்தீனில் பாப்பா (Papa) என்றும் திருத்தந்தையைக் குறிப்பிடுகின்றனர்.

05. பாப்பாஸ், பாப்பா என்பதற்கு தந்தை என்றே பொருள்.

06. உரோமையின் ஆயராகத் தெரிவு செய்யப்படுபவரே அனைத்துலக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான திருத்தந்தை ஆவார்.

07. பாப்பரசர் என்று சொல்வதற்கு முன் உரோமை ஆயர் என்பதே வழக்கில் இருந்தது.

08. திருத்தந்தையே வத்திக்கான் நகரத்தினுடைய மன்னருமாவார்.

09. திருத்தந்தையர் பேதுருவின் பதிலாள் (Vicar of Peter) என்றே அழைக்கப்பட்டு வந்தனர்.

10. காலப்போக்கில் அவர்கள் கிறிஸ்துவின் பதிலாள் (Vicar of Christ) என்று அழைக்கப்படுகின்றனர்.

11. கி.பி 296 - 304 வரை உரோமை ஆயராக இருந்த மார்சலின் தம் பெயருக்கு முன் திருத்தந்தை என முதன் முதலாகப் பயன்படுத்தினார்.

12. திருத்தந்தையின் பணி PAPACY எனப்படுகிறது.

13. திருச்சபையின் மேல் அவருக்குள்ள அதிகாரம், திருப்பீடம் (Holy See) அல்லது திருத்தூதுப் பீடம் (Apostilic See) என்று அழைக்கப்படுகின்றது.

14. Holy See என்பதற்கு புனிதத் தன்மையுள்ள ஆட்சியின் எல்லை எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

15. இது திருத்தூதர்களின் (Apostles) ஆட்சியின் எல்லை எனவும் அழைக்கப்படுகிறது.

16. "திருத்தூதர்களின் ஆட்சியின் எல்லை" என்ற சொற்றொடரில், திருத்தூதர்கள் என்பது புனித பேதுரு, புனித பவுல் ஆகிய இருவரையும் குறிக்கிறது.

17. புனித பேதுரு மீன்பிடித் தொழிலைச் செய்து வந்தவர். "உண்மையான மனிதர்களைப் பிடிப்பவராக்குவேன்" என இயேசு கூறிய வார்த்தைக்காக அவரைப் பின்தொடர்ந்தவர்.

18. இயேசுவின் 12 சீடர்களுள் ஒருவரான இவரைப் பார்த்துத்தான் இயேசு, "பேதுரு, நீ பாறை, உன் மீது எனது திருச்சபையைக் கட்டுவேன்" எனக் கூறினார்.

19. இயேசு நியமித்தன் அடிப்படையில், திருச்சபையின் முதல் திருத்தந்தை புனித பேதுருவே ஆவார்.

20. திருச்சபை வரலாற்றில் மிக அதிகமான நாள்கள் திருத்தந்தையாகப் பணியாற்றியவர் திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் (1846 - 1878) ஆவார்.

21. திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் 31 ஆண்டுகள், 7 மாதங்கள் மற்றும் 23 நாட்கள் அதாவது 11,560 நாட்கள் திருத்தந்தையாகப் பணி செய்துள்ளார்.

22. திருச்சபை வரலாற்றில் மிகக் குறைவான நாள்கள் திருத்தந்தையாகப் பணியாற்றியவர் திருத்தந்தை ஏழாம் அர்பன்.

23. திருத்தந்தை ஏழாம் அர்பன் அவர்கள் 1590 செப்டெம்பர் 15 முதல் 27 வரை அதாவது, 13 நாள்கள் மட்டுமே திருத்தந்தையாகப் பணிசெய்துள்ளார்.

25. திருத்தந்தையை நேரில் சந்தித்து பேசுபவர்கள் 'His Holeness" என்று கூறி அழைப்பதே முறையாகும்.

26 திருத்தந்தை இல்லாத இடங்களில் அவரைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு 'Holy Father" (அதாவது, திருத்தந்தை) என்று அழைப்பார்கள்.

27. திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்களுக்குப் பிறகு, திருத்தந்தையாகப் பணியேற்றவர். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ஆவார்.

28. தனது பணிக்காலத்தை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்ரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களில் உள்ள 20ஆம் மேற்பட்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

29. இந்தியாவைச் சேர்ந்த சகோதரி அல்போன்ஸா உள்ளிட்ட 30 பேருக்கு புனிதர் பட்டம் வழங்கியுள்ளார்.

30. தமிழகத்தை சேர்ந்த இறையூழியர் தேவசகாயம் பிள்ளை உள்பட பலருக்கு அருளாளர் பட்டம் வழங்கியுள்ளார்.

31. கத்தோலிக்கத் திருச்சபையின் பழமையான அம்சங்களை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான சீர்திருத்தங்களில் ஈடுபட்டார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

32. சமயங்களுக்கிடையில் நட்புறவை வளர்க்கும் வகையில் பிற சமயத் தலைவர்களுடன் அவர் உரையாடல் நிகழ்த்தினார். மக்கள் கடவுளை முழு மனதோடு தேட வேண்டும் என்றும், பணத்தின் மீதான ஆசையால் உலகம் கடவுளை இழந்து தவிப்பதாகவும், திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் சுட்டிக்காட்டினார்.

33. அறிவியலும், சமயமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல என்றும், படைத்தவர் இல்லாமல் படைப்புப் பொருளான உலகம் இருக்க முடியாது எனவும் அவர் எடுத்துரைத்தார்.

34. உலகில் நடைபெற்று வரும் பயங்கரவாதச் செயல்களையும், உள்நாட்டு போர்களையும் முடிவுக்குக் கொண்டுவருமாறு அவர் குரல் கொடுத்தார்.

35. தான் சந்தித்த பல நாட்டு அரசியல் மற்றும் சமயத் தலைவர்களும் இதற்காக உழைக்கும்படி அவர் வேண்டுகோள் விடுத்தார்.

36. பொது நன்மைக்காக கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தார்.

37. தம்முடைய தாழ்ச்சியின் காரணமாக, வயோதிபத்தை முன்னிறுத்தி கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி தன் பொறுப்பிலிருந்து திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் விலகினார்.

38. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் பணி விலகியதைத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபைக்கு 266வது திருத்தந்தையை தேர்ந்தெடுக்கும் சூழல் உருவானது.

39. திருச்சபை வரலாற்றில் 1045இல் 9ஆம் பெனடிக் 1046இல் 6ஆம் கிரகோரி, 1294இல் 5ஆம் செலஸ்தீன், 1415இல் 12ஆம் கிரகோரி ஆகிய நான்கு திருத்தந்தையர்கள் இதற்கு முன் பதவி விலகியிருக்கிறார்கள்.

40. புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுப்பதற்கான அவைக்கூட்டம் நடப்பதற்கு, திருப்பீடம் வெறுமையாகி பதினைந்து நாட்கள் கழிந்திருக்க வேண்டும்.

41. திருத்தந்தை இல்லாத அந்த இடைக்காலத்தில் திருச்சபையின் ஆட்சிப் பொறுப்பின் துறைத் தலைவர்களாக அனைத்து கர்தினால்களும் தம் பணிப் பொறுப்பை இழப்பர். திருச்சபையின் உச்ச நீதிமன்றத் தலைவர் (Major Penitentiary), தூய உரோமைத் திருச்சபையின் ஆட்சியாளர் (Camerlengo of the Holy Roman Church), கர்தினால் குழுவின் தலைவர் (Deen of the College of Cardianls) ஆகிய மூன்று கர்தினால்கள் மட்டுமே ஆட்சிப் பொறுப்பில் இருப்பார்கள்.

42. இந்த மூவரைத் தவிர உரோமை மறைமாவட்டத்தின் கர்தினாலும், வத்திக்கான் நாட்டு கர்தினாலும் தம் பொறுப்புக்களைத் தொடர்வர். .

43. 16ஆம் பெனடிக்ட் பணி விலகியதை தொடர்ந்து திருச்சபையின் உச்ச நீதிமன்றத் தலைவராக கர்தினால் மனுவேல் மொந்தேயிரோ கே காஸ்த்ரோ அவர்களும், தூய உரோமைத் திருச்சபையின் ஆட்சியாளர் கர்தினால் தார்ச்சீசியோ பெர்த்தோனே அவர்களும், கர்தினால் குழுவின் தலைவர் ஆஞ்சலோ சொதானோ அவர்களும் பொறுப்பில் இருந்தனர்.

44. அவசரக் காரியங்கள் குறித்து முடிவுகள் எடுக்கும் தேவை எழுந்தால், கர்தினால் குழுவின் தலைவர் ஆஞ்சலோ சொதானோ அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

45. கர்தினால்கள் உரோமையில் உள்ள புனித பேதுரு வளாகத்தில் ஒன்று கூடி, திருப்பலியில் பங்கேற்றப் பின் சிஸ்டைன் ஆலயத்திற்கு செல்வர். அங்கேதான் "கான்கிலேவ்" என்னும் கர்தினால்களின் கூட்டம் நடைபெறும்.

46. 1975ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டப்படி, 80 வயதுக்குட்பட்டவர்கள் தான் திருத்தந்தையை தேர்வு செய்யும் தேர்தலில் பங்கேற்கலாம்.

47. நீண்ட தியானம், செபத்திற்குப் பிறகு கர்தினால்களுக்கு வாக்குச் சீட்டு அனுப்பப்படும்.

48. அதில் திருத்தந்தையாக நான் .............. (இவரைத்) தேர்ந்தெடுக்கிறேன் என எழுதி, அந்த சீட்டை இரண்டு முறை மடித்து அதை வாக்குப் பெட்டிக்குள் போடுவார்கள்.

49. வாக்குகள் எண்ணிய பிறகு வாக்குச் சீட்டுக்கள் எரிக்கப்படும். வெறும் வாக்குச் சீட்டுக்கள் எரிக்கப்படும்போது, கருப்புப் புகை வெளிவரும் இது தேர்தலின் முடிவில் இன்னும் திருத்தந்தை தெரிவுசெய்யப்படவில்லை என இறைமக்களுக்கு தெரியப்படுத்தும்.

50. திருத்தந்தை தெரிவு செய்யப்பட்டு விட்டால், வாக்குச் சீட்டுகளுடன் இரசாயணம் சேர்க்கப்பட்டு எரிக்கப்படும். அப்போது வெண்ணிற புகை வெளிவரும். இது திருத்தந்தை தெரிவு செய்யப்பட்டதை இறைமக்களுக்கு தெரிவிக்கும்.

51. ஒரு கர்தினால் அறுதிப் பெரும்பான்மையுடன் வாக்குகளை பெறும் சூழலில், தேர்தல் நடத்தும் கர்தினால் குழுவின் தலைவர் (Deen of the College of Cardianls) தெரிவு செய்யப்பட்டவரிடம் வந்து, "திருத்தந்தையாக தாங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறீர்களா?" (Do you accept your canonical election as Supreme Pontiff?" எனக் கேட்பார்.

52. "ஏற்கிறேன்" என்று அவர் சொன்னதுமே அவர் திருத்தந்தையாக மாறிவிடுகிறார் என்பதே கத்தோலிக்க மரபு.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

*திருத்தந்தை 266, நன்றி வைகரைறைப் பதிப்பகம்*





## சிறப்பிதழ்

# திருத்தந்தை பிரான்சிஸ்

ஜோர்ஜ் மாரியோ பேர்கோக்லியோ Jorge Mario Begoglio அவர்கள் திருத்தந்தையாக 2013ம் ஆண்டு பங்குனி மாதம் தெரிவு செய்யப்பட்டார். பிரான்சிஸ் என்ற பெயரை அவர் தெரிவு செய்து கொண்டார். இவரே அமெரிக்க கண்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது பாப்பரசராவார்.

பெர்க்கோக்லியோ ஆர்ஜென்டினாவின் புவனோஸ் ஐரேஸ் நகரில் 1936ம் ஆண்டு மார்கழி 17ம் திகதி பிறந்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட





தொற்றுதலினால் அவரது ஒரு நுரையீரல் அகற்றப்பட்டது. தமது பள்ளி இறுதிப் படிப்பின் பின் புவனஸ் ஐரேஸ் பல்கலைக் கழகத்தில் இணைந்து வேதியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதன் பின்னர் இயேசு சபையின் குருமடமாகிய 'வில்லா டெவோட்டா' வில் இணைந்து 1958ம் ஆண்டு பங்குனி மாதம் இயேசு சபையில் முறையாக இணைந்துகொண்டார். பின்னர் தமது தத்துவக் கல்வியையும், இறையியல் கல்வியையும் புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். தத்துவத்தில் இளமானிப் பட்டம் பெற்ற இவர் பின்னர் ஜெர்மனியின் பிரைபெர்க் பல்கலைக் கழகத்தில் இறையியலில் முதுமானிப் பட்டமும் பெற்றார்.

## குருத்துவம்

பேர்கோக்கிலியோ 1969ம் ஆண்டு மார்கழி மாதம் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். பின்னர் இயேசு சபையாரின் ஆர்ஜென்டினா மாகாணத்தின் தலைவராக 1973ம் ஆண்டு பதவியேற்றார். பின்னர் தாம் கல்வி கற்ற புனித மிக்கேல் குருத்துவ கல்லூ-



பாவனையை முன்னிலைப்படுத்தும் முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்தார். ஆர்ஜென்டினாவின் ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னான்டஸ் முன்னெடுத்த தடையற்ற கருத்தடை சாதன பாவனையையும் செயற்கை விந்தணு கருத்தரித்தலையும் இவர் எதிர்த்தார்.

## திருத்தந்தையாகத் தெரிவு

2013ம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி இவர் தமது 76வது வயதில் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டு கத்தோலிக்கத் திருச்சபையின் 266வது தலைவரானார். இவரே அமெரிக்க கண்டங்களினின்று தெரிவு செய்யப்பட்ட முதல் பாப்பு ஆவார். இவரே முதலாவது ஐரோப்பியரற்றவரும், முதலாவது இயேசு சபை பாப்புமாவார். 12ம், 13ம் நூற்றாண்டின் எளிமைமிகு கிறிஸ்தவ பணியாளரான அசிசி நகர் பிரான்சிசின் பெயரைத் தெரிவு செய்து கொண்டதன் மூலம் இவர் தமது தாழ்ச்சியின் தன்மையை வெளிப்படுத்தினார். பாப்பரசராகத் தெரிவு செய்யப்படும் முன்னர் இவர் பேராயராகவும் கருதினாலாகவும் 12 ஆண்டுகள் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாம் பதவியேற்றபின் வத்திக்கான் நகரின் புனித பேதுருவின் சதுக்கத்திலிருந்து அவர் கூறியதாவது: **"நீங்கள் அறிந்துள்ளதன்படி எனது சகோதர கர்தினால்கள் உரோமையின் ஆயரைத் தெரிவு செய்துள்ளார்கள். ஆனால் அவர்கள் அந்நகரிலிருந்து வெகு தொலைவிலிருந்த ஒரு நாட்டிலிருந்தே இவரைத் தெரிவு செய்துள்ளனர். இதோ நான் உங்கள் முன் நிற்கிறேன். உங்கள் அரவணைப்பிற்காக நன்றி."**

இவரது தெரிவையிட்டு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இவ்வாறு கூறினார்: **"அமெரிக்க கண்டத்தின் முதலாவது பாப்பரசாக இவர் தெரிவு செய்யப்பட்டமை எம் பிராந்தியத்தின் வலிமையையும் உயிர்த்துடிப்பையும் அது எமது உலகை உருவாக்க எடுக்கும் முயற்சியையும் எடுத்தியம்புகின்றது. அமெரிக்காவில் உள்ள மில்லியன் கணக்கான ஹிஸ்பானிய மக்களோடு நான் இந்த வரலாற்றுப் புகழ் மிக்க தினத்தில் அவர்களது மகிழ்ச்சியில் பங்கேற்கின்றேன்".** பேர்கோக்கிலியோ தமது தாய்மொழியாகிய ஸ்பானிய மொழியுடன்

முதலாவது ஐரோப்பியரல்லாதவர் இவரே. புனித பிரான்சிஸ் அசிசியின் பெயரையே இவர் தெரிவு செய்து கொண்டமை இவரது தாழ்ச்சி மிக்க பயணத்திற்கான முன்னோடி என்கின்றார்கள் நோக்கர்கள்.

பாப்பரசராகத் தெரிவு செய்யப்படும் முன் பெர்கோக்கிலியோ புவனஸ் ஐரேஸின் பேராயராக 1998 முதல் 2013 வரை கடமையாற்றினார். 2001ம் ஆண்டு முதல் பதின்மூன்று ஆண்டுகளாகக் கர்தினாலாக பதவி வகித்திருந்தார். அத்தோடு ஆர்ஜென்டினா நாட்டின் ஆயர்கள் மாநாட்டின் தலைவராக 2005ம் ஆண்டு முதல் 2011 வரை பதவி வகித்திருந்தார்.

பாப்பரசராகப் பதவி ஏற்றபின் அவர் பயணித்த முதல் சர்வதேசப் பயணமானது அவரது அண்டை நாடாகிய பிரேசிலுக்கு 2013ம் ஆண்டு ஆடி மாதத்தில் மேற்கொண்ட பயணமாகும். அதே ஆண்டு மார்கழி மாதம் **"2013ம் ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த நபர்"** என்ற விருதினை அவருக்கு அளித்து கௌரவித்தது, சர்வதேச சஞ்சிகையாகிய 'டைம்'. இத்தகைய விருதினை ஒருவர் பெறுவது மிக அபூர்வமானதாகும்.

## தொடக்க கால வாழ்வும், கல்வியும்

ஜோர்ஜ் மாரியோ பேர்கோக்லியோ தென் அமெரிக்காவின் அர்ஜென்டினாவின் புவேனோஸ் ஐரேஸ் நகரில் இத்தாலியில் வடக்குப் பகுதியில் தூதரின் நகர் அமைந்துள்ள பியத்மாந்து பிரதேசத்தின் பகுதியிலிருந்து சென்று குடியேறிய இத்தாலிய பெற்றோருக்கு ஐந்து குழந்தைகளுள் ஒருவராகப் பிறந்தார். அவருடைய பெற்றோர் பெயர்கள் மாரியோ ஹோசே தொடருந்துத் துறையில் அலுவல் பார்த்தார். ரெஜினா மரியா வீட்டுப் பொறுப்பைப் பார்த்துக்கொண்டார்.

தம் இளமையில் அரசு பள்ளியில் கல்வி பயின்றார். சுமார் 20 வயது இளைஞராயிருக்கும்போதே அவருக்கு ஏற்பட்ட ஒரு கடுமையான கிருமி

ரியில் தத்துவ மற்றும் இறையியல் பீடத்தில் தலைமைப் பொறுப்பேற்றார் (1980-1986). அத்தோடு இறையியல் பேராசிரியராகவும் கடமையாற்றினார்.

1992ம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி பெர்கோக்கிலயோ புவனஸ் ஐரேஸ் உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக பொறுப்பேற்றார். பின் 1998ம் ஆண்டு மாசி மாதம் 28ஆம் திகதி அந்நகரின் பேராயராக உயர்த்தப் பெற்றார். அதே நேரத்தில் அவர் ஆர்ஜென்டினா நாட்டில் வாழ்ந்த தனி அமைப்பு இல்லாத கீழைச் சபைக் கத்தோலிக்கர்களுக்கும் ஆயராக நியமிக்கப்பட்டார். மூன்றாண்டுகளின் பின்னர் 2001ஆம் ஆண்டு மாசி மாதம் 21ஆம் திகதி இரண்டாம் அருள் சின்னப்பர் பாப்பரசரால் அவர் கருதினால் ஆக திருநிலைப்படுத்தப்பட்டார். அப்போது அவருக்கு புனித இராபர்ட் பெல்லார்மீனோ கோவில் கர்தினால் - குரு என்னும் பதவியும் அளிக்கப்பட்டது. 2005ம் ஆண்டில் ஆர்ஜென்டினா நாட்டின் ஆயர் பேரவைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் அப்பதவியை 2011ம் ஆண்டுவரை வகித்து வந்தார்.

இரண்டாம் அருள் சின்னப்பர் 2005ம் ஆண்டு மறைந்த பின்னர் நடந்த பாப்பரசர் தேர்வில் பெர்கோக்கிலியோ இரண்டாவது பெரும்பான்மையான வாக்குகள் பெற்றார் எனக் கூறப்படுகின்றது. இதில் ஜெர்மனியின் ஜோசப் ரட்சிங்கர் வெற்றி பெற்றார்.

இவருடைய குருத்துவத்தின் ஆரம்ப காலத்தில் இவர் ஒரு பாரம்பரியவாதியாகவே காணப்பட்டார். ஆர்ஜன்டினா நாட்டில் ஒரே பாலார் திருமணம் சட்டபூர்வமாக்கப்பட்டமைக்கு இவர் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார். **"இறைவனின் திட்டத்தை அழித்தொழிக்கும் ஒரு செயல்"** என இதை வருணித்தார். இந்த சட்டவாக்கம் ஆர்ஜென்டினாவில் 2010ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இந்த நாடுதான் இலத்தீன் அமெரிக்காவில் இத்தகைய சட்டத்தை இயற்றிய முதல் நாடாகும். இதுபோலவே கருத்தடை சாதனங்கள்

இத்தாலி மற்றும் ஜெர்மன் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராவார்.

## பாப்பரசராக முதலாவது பன்னாட்டுப் பயணம்

திருத்தந்தை பிரான்சிஸ் தமது முதல் பன்னாட்டுப் பயணத்தினை 2013 ஆடி மாதம் 22ம் திகதி மேற்கொண்டு பிரேசில் நாடு சென்றார். ரியோ டி ஜெனய்ரோ விமான நிலையத்தில் அந்நாட்டு ஜனாதிபதி டில்மா ரௌசெப் அவர்களால் வரவேற்கப்பட்டார். வரவேற்பு வைபவத்தின் பின்னர் ரியோ நகரின் சந்து பொந்துகளின் ஊடாக அவரது பவனி சென்றது. **"மக்களோடு மிக நெருக்கமாக இருக்கவேண்டும்"** என்ற அவரது அவாவினை திருப்தி செய்யவே இந்த பவனி ஏற்பாடு செய்யப்பட்டது.

ரியோவில் உலக இளைஞர் தினம் இவ்வேளையில் கொண்டாடப்பட்டது. முப்பது இலட்சம் மக்கள் இவ்விழாவின் இறுதியில் நடைபெற்ற திருத்தந்தையின் திருப்பலியில் கலந்து கொண்டனர். இப்பயணம் முடிவடைந்து மீண்டும் உரோமை திரும்பும் வேளையில் பாப்பரசர் வானூர்தியில் வைத்து கொடுத்த நேர்முகத்தில் ஒரு புரட்சிகரமான கருத்தை வெளியிட்டார். இதில் தன்னினச் சேர்க்கையாளர்களைப் பற்றிய அவரது திறந்த கொள்கையை வெளிப்படுத்தினார். **"ஒருவர் தன்னினச் சேர்க்கையாளராக இருந்து அவர் ஆண்டவரைத் தேடினார் என்றால், அவருக்கு நல்லெண்ணம் இருக்குமானால், நான் யார் அவரைத் தீர்ப்பிட?"** என்று அவர் கூறியதாக நியூ-யோர்க் டைம்ஸ் நிருபர் எழுதினார்.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்...





"தெருக்களில் அலைந்ததால் ஏற்பட்ட சிராய்ப்புக்களும், காயங்களும், அழுக்கும் உள்ள திருச்சபையையே நான் பெரிதும் விரும்புகின்றேன். தன் சொந்த பாதுகாப்பைத் தொற்றிக் கொண்டு அதில் நோயாளியாக கிடக்கும் ஒரு திருச்சபையைவிட அது மேலானது."

# சிறப்பிதழ்



## பாப்பரசர்: ஆன்மீக மற்றும் உலகத் தலைவர்

கடந்த 2013 புரட்டாதி மாதம் திருத்தந்தை பிரான்சிஸ் சிரியாவில் அமைதி ஏற்பட வேண்டும் என அவரோடு சேர்ந்து பிரார்த்தனை செய்யமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார். இதற்காக அவர் புரட்டாதி 7ம் திகதியன்று வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் இரவு விழிப்பு செபம் ஒன்றினையும் மேற்கொண்டார். இதில் சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டனர். கத்தோலிக்க செய்திச் சேவையின் அறிக்கையின்படி, **"மனிதன் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்கும் போது, ஆட்சி அதிகார ஆசை தன்னை ஆட்கொள்ள அவன் அனுமதிக்கும்போது வன்முறை, பாராமுகம், மோதல்கள் முதலியவைக்கான கதவுகள் அகலத் திறக்கப்படுகின்றன"** என்று பாப்பரசர் உரைத்தார்.

மோதலில் ஈடுபட்டவர்கள் தமக்கிடையே ஒரு அமைதியான தீர்வை எட்ட வேண்டும் என அவர் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். **"உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டிருக்கும் தன்னலத்தை விட்டொழியுங்கள். உங்களிடையே நிலவும் பாராமுகத்தினை மேற்கொள்ளுங்கள். இதனால் நீங்கள் மற்றவர்களைப் பற்றி சிந்திப்பதில்லை. உங்கள் மரணத்திற்கேதுவான தீர்மானங்களுக்கு மேலாக உங்கள் நல்லெண்ணம் எழும்பட்டும். மற்றவர்களோடு உரையாடவும் சமாதானமடையவும் உங்களைத் திறந்துகொள்ளுங்கள்".**

பிறகு இத்தாலிய இயேசு சபையாரின் பிரசுரமாகிய La Civiltà Cattolica என்ற பத்திரிகைக்கு ஒரு பேட்டியளித்தார். அதில் அவர் மதங்களுக்கிடையேயான உரையாடல்கள் பரந்த அடிப்படையிலானதாக இருக்க வேண்டும் என்றும், வெறுமனே தன்னினச் சேர்க்கை, கருக்கலைப்பு போன்ற சிற்சில விடயங்களில் கருத்தொற்றுமை காண்பதாக மட்டும் இருந்திடலாகாது என்றார். **"நாம் ஒரு புதிய சமநிலையைக் காண வேண்டும். இல்லாவிட்டால் எமது ஆன்மீக நிலைப்பாடு கூட கலைந்துவிடக் கூடும். நற்செய்தியின் புதுமணமும் நறுமணமும் இல்லாதொழிந்துவிடும்"** என்றார் அவர். **USA Today பத்திரிகையின் கருத்துப்படி, "நற்செய்தியின் முன்மொழிவானது இன்னமும் எளிமையானதும், ஊடுருவுவதுமானதாகவும் இருக்க வேண்டும். இதிலிருந்துதான் ஒழுக்கக் கோவைகள் புறப்பட வேண்டும்"** என்றார் அவர்.

பெண்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுவதை அவர் வரவேற்காத அதே வேளையில் திருச்சபையின் மிக அவசியமான ஒரு அங்கமாகப் பெண்களைக் கருதுகின்றார். **"நாம் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும்போது பெண்களின் நுண்ணறிவு தேவை என்பதை அறிவேன்"** என்கிறார் அவர். முந்தின பாப்பரசர்களை விட தன்னினச் சேர்க்கையாளர் சம்பந்தமாக ஒரு சார்புநிலை அணுகுமுறையை அவர் கையாளுகின்றார் என்பது தெளிவு. **"கடவுள் தம் படைப்பில் நம்மை சுதந்திர மனிதர்களாக உலவ விட்டுள்ளார். எனவே நாம் ஒரு தனி மனிதனின் ஆன்மீகத்தில் தலையிடுவது முறையாகாது"** என 'தி கார்டியன்' பத்திரிகையின் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

2013ம் ஆண்டு மார்கழியில் திருத்தந்தை பிரான்சிஸ் ஓர் அப்போஸ்தலிக்க சுற்று மடலினை வெளியிட்டார். அதில் கத்தோலிக்கத் திருச்சபையில் பாரிய மாற்றங்களை அவர் எதிர்பார்ப்பதாகக் கூறினார். பழமைவாய்ந்த காலத்துக்குப் பொருத்தமற்ற பல சடங்கு சம்பிரதாயங்களைக் களையவேண்டும் என்ற எண்ணத்தினை வெளிப்படுத்தினார். **"தெருக்களில் அலைந்ததால் ஏற்பட்ட சிராய்ப்புக்களும், காயங்களும், அழுக்கும் உள்ள திருச்சபையையே நான் பெரிதும் விரும்புகின்றேன். தன் சொந்த பாதுகாப்பைத் தொற்றிக் கொண்டு அதில் நோயாளியாக கிடக்கும் ஒரு திருச்சபையைவிட அது மேலானது. தன்னைச் சுற்றியே வலம் வந்து கொண்டு இறுதியில் ஒவ்வொரு விதமான ஒழுங்கு முறைகளையும் மற்ற விடயங்களையும் விடாமல் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும் ஒரு திருச்சபையை நான் விரும்பவில்லை"** - திருத்தந்தை பிரான்சிஸ்

மேலும் மார்கழி 2013ம் ஆண்டு டைம் சஞ்சிகையின் "ஆண்டுக்கான சிறந்த நபர்" என்ற பட்டத்தினைப் பெற்றார். இப்பட்டம் இதற்கு முன்னர் 1963ம் ஆண்டு 23ம் அருளப்பருக்கும் 1994ம் ஆண்டு இரண்டாம் அருள் சின்னப்பருக்கும் கிடைத்துள்ளன. விக்கிலீக்ஸ் எட்வர்ட் ஸ்னோடன், செனட்டர் டெட் குருஸ், சிரிய ஜனாதிபதி பார் அல் அசாத், எடித் வின்சர் ஆகியோர் இவருக்கு போட்டியாக இருந்தாலும் இவரே இறுதியில் தெரிவு செய்யப்பட்டார். இதற்கான காரணம் இவர் கத்தோலிக்க திருச்சபையைவிட்டு விலகிய மிகப் பெருமளவிலான மக்களை சொற்ப காலத்திலேயே திரும்பவும் அதன் வசம் கொண்டு வருவதில் வெற்றி கண்டுள்ளார் என்பதே என நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

2014ம் ஆண்டு பங்குனி மாதம் இவர் உலகப் பிரசித்தி பெற்ற நோபல் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டார். இதில் அவர் தெரிவு செய்யப்படாவிட்டாலும்கூட உலகெங்கும் உள்ள மக்களுக்கு, சிறப்பாகக் கத்தோலிக்க மக்களுக்கு, நல்லெண்ணத் தூதுரையாளராக விளங்குகின்றார். இவ்வாண்டு கோடைகாலத்தில் இவர் ஆசியாவிற்கான முதல் பயணத்தை மேற்கொண்டார். தென் கொரியாவிற்கு ஆவணி மாதம் 5 நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தினை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வேளையில் வானூர்தியில் பத்திரிகை நிருபர்கள் இவரைப் பேட்டி கண்டனர். அப்போது இவர் தம் சொந்த வாழ்வினைப் பற்றியும் குறிப்பிட்டார். "இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நான் என் தந்தையின் இல்லத்திற்குச் சென்றுவிடுவேன்" என்று அவர் கூறியதாக 'தி கார்டியன்' பத்திரிகை நிருபர் எழுதுகின்றார். அத்தோடு ஏறக்குறைய அதே வேளையில் தம் குடும்பத்தவர்களில் பலர் ஒரு மோட்டார் விபத்தில் சிக்கி அதில் ஒருவர் பலியானார் என்ற செய்தியும் அவருக்குக் கிடைத்தது.

## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி



"ஆண்டவரே! நோயாளிகளிலும், ஏழைகளிலும், துன்புறுவோரிலும் உம்மைக் கண்டுகொள்ள எமக்கு உதவியருளும்"

"தாங்கள் அன்புகூரப்பட்டு மீட்கப்பட்டுள்ளோம் என்பதை அறிந்திருக்கும் சீடர்களின் மகிழ்வு வழியாக கிறிஸ்தவம் பரவுகின்றது"

"இன்று மக்கள் வறுமையினால் துன்புறுகின்றனர், ஆனால் அன்பின்மையாலும் துன்புறுகின்றனர்".



"சகோதர சகோதரிகளே, மாலை வணக்கம். கர்தினால்மார் கூடி உரோமுக்கு ஒரு ஆயரை கொடுக்க வேண்டிய கட்டாயத்தை நீங்கள் அறிவீர்கள். எனது சகோதர கர்தினால்மார் உலகின் எல்லைக்கே சென்று அவரை தெரிந்தெடுக்க வேண்டியதாயிற்று. ".இதோ, இங்கே நாம் இருக்கின்றோம்"

(13 - 03 - 2013, திருத்தந்தையின் முதல் வார்த்தைகள்)



சிறப்பிதழ்

# திருத்தந்தையின் பொன்மொழிகள்

'சில குருக்கள் வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் வாழ்வதற்குரிய முக்கிய காரணமாக, மந்தையோடு வாழ்ந்து அதன் மணம் கமழும் ஆயர்களாக இல்லாமல்: பழமைகளையும், புதுமைகளையும் சேர்த்துத் திரிபவர்களாக இருப்பதே ஆகும்.'
(28 ~ 09 ~ 2013, திருத்தைல அர்ச்சிப்பு திருப்பலி)

பரிசுத்த ஆவி எல்லா செபங்களிலும், எப்போதும், பிரசன்னமாக இருக்கின்றார். பரிசுத்த ஆவியின்றி எம்மால் செபிக்க முடியாது. பரிசுத்த ஆவி எம்முள் செபிக்கின்றார். அவரே எங்கள் உள்ளங்களை மாற்றுகின்றார். அவரே கடவுளை அப்பா, தந்தாய் என்று அழைக்க கற்றுத் தருகின்றார்.

'குருத்துவ மகிழ்ச்சி முழு விசுவாசிகளின் கூட்டத்திற்கும் விலைமதிப்பற்ற பொக்கிஷமாகும். அபிசேகம் செய்யப்பட்ட குருவுக்கு மட்டுமல்ல மக்கள் கூட்டத்திற்கும் மகிழ்ச்சியானது.

'இக்கேள்வியை உங்களிடம் கேளுங்கள்: எத்தனை முறை இயேசுநாதர் உள்ளே இருந்துக்கொண்டு வெளியே விடும்படி உங்களது கதவுகளை தட்டிக்கொண்டிருந்தார்? உங்களது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக நீங்கள் அவரை வெளியே விடவில்லை. நாங்களோ எங்களை இறைவனின் சுதந்திர பிள்ளைகளாக அல்லாது அடிமைகளாக மாற்றும் சில கட்டமைப்புகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றோம்.'
(18 ~ 05 ~ 2013, பெந்தகோஸ்தே திருவிழிப்பு)

'கடவுள் நம்மை மன்னிப்பதில் சோர்வு அடைவதில்லை : ஆனால், நாம் தான் அவரிடம் மன்னிப்பு கேட்பதில் மனம் தளர்ந்து விடுகின்றோம்.'
(17 ~ 03 ~ 2013, திருத்தந்தையாகி தமது முதலாவது மூவேளைச் செப உரையில்)

வெளியே வந்து வீதிக்குச் சென்றால் சில விபத்துக்கள் ஏற்படலாம். வீட்டிலேயே முடங்கிக் கிடந்தால் நோய் நம்மைத் தாக்கலாம். நோய்வாய்ப்பட்டு வீட்டில் முடங்கிக் கிடப்பதைவிட, வீதிக்குச் சென்ற விபத்தைச் சந்திப்பது மேலானது.

அதிகார வர்க்கத்தில் பொறுப்பு வகிப்பவர்களைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்கிறேன். இப்படைப்பை பாதுகாத்து வாருங்கள். இயற்கையில் பொறிக்கப்பட்டிருக்கும் கடவளின் திட்டத்தைப் பாதுகாப்பீர்களாக, ஒருவர் ஒருவரைப் பாதுகாப்போம். சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்

'ஒரு நற்செய்திப் பணியாளர், மரண வீட்டிற்கு சென்று வந்தவர் போல தோற்றமளிக்கக் கூடாது.'
(24 ~ 11 ~ 2013, மகிழ்ச்சியின் நற்செய்தி)

'புறம் பேசுதல் கூட கொலை செய்யக் கூடியது. ஏனெனில், ஒரு நபருடைய நன்மதிப்பை அது கொன்றுவிடுகிறது. புறம் கூறுவது மிகவும் பயங்கரமானது! முதலில் அது நன்றாகவும், இனிப்பைச் சாப்பிடுவது போல இதமாகவும் அமையலாம். ஆனால், முடிவில் அது இதயத்தை கசப்புணர்வால் நிரப்பி எமக்கு நஞ்சையூட்டுகிறது.'
(16 ~ 02 ~ 2014, மூவேளைச் செபம்)

'முழுமையான குடும்பம் எங்கும் இருப்பதில்லை, நிறைவான கணவரோ, அல்லது மனைவியோ இருப்பதில்லை. ஆகவே, நிறைவான மாமிமார் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. ஒரு சந்தோசமான குடும்பத்தில் இந்த மூன்று வாக்கியங்கள் அடிக்கடி பாவிக்கப்பட வேண்டும்: 'நான் இதை செய்யட்டுமா? நன்றி? மற்றும் என்னை மன்னிக்கவும்.' மேலும், சமாதானம் செய்யாமல் நாளை நிறைவு செய்ய வேண்டவே வேண்டாம்'
(14 ~ 02~ 2014, திருமண பந்தத்தில் இணைய தீர்மானித்த ஜோடிகளுடனான சந்திப்பு)

'இயேசுக் கிறிஸ்துவை அறிக்கையிடாத ஒருவர், சாத்தானுடைய உலகப் போக்கையே அறிக்கையிடுகிறார்.'



இளையோரே உங்களின் நண்பராக இயேசு இருக்க விரும்புகிறார். இந்த நட்பின் மகிழ்வை எல்லா இடங்களிலும் பரப்ப அவர் விரும்புகிறார்

'கிறிஸ்துவின் இதயம் அன்புக்காக தம்மையே வெறுமையாக்கிய கடவுளின் இதயம் இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் தங்களையே வெறுமையாக்க வேண்டும்.

'சிறு கூட்டத்திற்காக தனது நிர்வாகக் கடமைகளை மட்டுமே நிறைவேற்றும் ஒரு திருச்சபை நிச்சயமாக நீண்ட கால ஓட்டத்தில் நோயுற்றதாக மாறிவிடும். தன்னைத் தனிமைப்படுத்தும் ஆயன் மந்தைக்கான உண்மையான ஆயனாக இருக்க முடியாது. மற்ற ஆடுகளைத் தேடிச்செல்லாது இருக்கும் ஒன்றின் முடியை அழகு படுத்தும் 'முடி திருத்துனருக்கு' ஒப்பாவார். இன்றைய நிலையில் ஒன்றே உள்ளே இருக்கிறது. மற்ற 99 யும் தேடி வெளியே செல்லவேண்டியுள்ளது'

'பிறவாமல், அநீதியான முறையில் கருக்கலைப்புச் செய்யப்படும் ஒவ்வொரு குழந்தையும் இயேசுகிறிஸ்துவின் முகத்தைக் கொண்டிருக்கிறது. ஆம். ஆண்டவரின் முகத்தைக் கொண்டிருக்கிறது.'

'ஒவ்வொரு விடயங்களையும் பொறுப்புள்ள விதமாகச் சீர்தூக்கிப் பார்க்கும் வரத்தை ஆண்டவரிடம் கேட்போம். அவர் எமது மீட்பிற்காக போராட வந்தவர். அவர் சாத்தானை வென்றவர்! தயவுசெய்து, சாத்தானோடு பேரம் பேச வேண்டாம். அவன் மீண்டும் வீடு திரும்பி, எம்மை முழுமையாகக் கைப்பற்றவே விரும்புகிறான். ஆகவே தனிப்பட்ட விதத்தில் பார்ப்பதைத் தவிர்த்து, விழிப்பாய் இருங்கள்! என்றும் இயேசுவோடு இருங்கள்!'

# காலிமுகத்திடலில் திருத்தந்தையால் நிறைவேற்றப்படும் திருப்பலி தொடர்பாக நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பு

## 06.01.2015

- காலிமுகத்திடலில் அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரை புனித நிலைக்கு உயர்த்தும் திருப்பலி 2015 தை 14ம் திகதி அன்று நடைபெறும்
- திருத்தந்தை 7.45 மணிக்கு காலிமுகத்திடலில் திறந்த ரதத்தில் வலம் வந்து மக்களை ஆசீர்வதிப்பார்.
- இவ்வுன்னத நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக விசுவாசிகள் காலிமுகத்திடலுக்கு வருமாறு அழைக்கின்றோம்.
- 13ம் திகதி மாலை 5.00 மணிக்கு விசுவாசிகள் காலிமுகத்திடலுக்குச் செல்ல முடியும். அன்று இரவு 10.00 மணி தொடக்கம் சமய வழிபாடுகளோடு ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்படும்.
- 14ம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு வருகை தந்தால் திருப்பலி நடைபெறும் பீடத்திற்கு அருகில் சன நெருக்கடிகளைத் தடுக்கலாம்
- போக்குவரத்து வசதிகள் இலங்கை போக்குவரத்து சங்கத்தினால் புகையிரத சேவையினூடாகவும் வழங்கப்பட இருப்பதால் அது தொடர்பான மேலதிக தகவல்களை எமது பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவற்றை பார்வையிடவும்.
- பொதுவசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளது. அதாவது குடிநீர், உணவு, மலசலகூட வசதிகள் போன்ற தேவைகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது.
- திருப்பலியில் பங்குபற்றும் அருட்தந்தையர்கள் மற்றும் திவ்விய நற்கருணை வழங்கும் அருட்சகோதர அருட்சகோதரிகள் தை மாதம் 14ம் திகதி காலை 4.00 மணிக்கு மருதானை புனித சூசையப்பர் கல்லூரிக்கு வருகை தரவும். அவர்களை அழைத்துச் செல்ல வாகன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- விசுவாசிகளே நாங்கள் உங்களிடம் கேட்டுக் கொள்வது நேரகாலத்தோடு திருப்பலிக்கு வருமாறு உங்களை அழைக்கின்றோம்.
- பொறுமையாக அமைதியாக ஒழுக்கமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
- திருப்பலி நிறைவில் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் வெளியேறும் வரை பொறுமையாக தத்தம் இடங்களிலே இருக்கவும்.
- அன்றைய நிகழ்வின் இறுதியாக விமானப் படையினரின் விமான சாகசங்கள் நடைபெறும்.

**அருட்தந்தை அந்தனி பர்னாந்துபுள்ளே**
**செயலர்**
**பாப்பிறை, காலிமுகத்திடல் நிகழ்வுப் பொறுப்பாளர்.**

# திருத்தந்தையின் வருகையை முன்னிட்டு

# சுகாதார சேவை



விமான நிலையத்திலிருந்து அப்போஸ்தலிக்க பிரதிநிதியின் அலுவலகம் வரையில் முதலுதவி சேவைகள் பாதையின் இருபக்கமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வைத்தியர், தாதிமார், சுகாதார ஊழியர்கள் உட்பட்ட 13 இடங்களில் அவசர சேவை வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும். இதற்கிடையில் மடுத்திருப்பதிக்கு செல்லும் பாதைகளிலும் இவ்வாறான சேவைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் நடைபெறும் நிகழ்வில் பிரதான வைத்தியர் சேவை நிலையம் மூன்றும், நடமாடும் வைத்திய சேவை ஐந்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலுவி வழங்கக் கூடிய சுகாதார ஊழியர்கள் கடமையில் ஈடுபடுவார்கள்.

**வைத்தியர் மக்சி பர்னாந்து பிள்ளை, பாப்பிறை, சுகாதார சேவை சங்கம்**

# திருத்தந்தையின் இலங்கை விஜயம் உறுதி



# தவறான செய்திகளையோ வதந்திகளையோ நம்பவேண்டாம்

அண்மையில் திருச்சபையின் தலைமை பீடத்தினால் ஜனவரி மாதம் 13ம் திகதியிலிருந்து 15ம் திகதி வரை நடைபெறவிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் இன் இலங்கை விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளது எனும் செய்தி பல்வேறு சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது. வெவ்வேறு தனி நபர்களினாலும் குழுக்களினாலும் இத்தகைய செய்திகள் மின்னஞ்சல் வழியாகவும் பரப்பப்படுகின்றன. மேலும் சில தேர்தல் பிரசார கூட்டங்களிலும் திருத்தந்தையின் இலங்கை விஜயம் குறித்து சந்தேகங்களை எழுப்பும் விதத்தில் நிஜத்திற்கு முறனான கருத்துகள் அரசியல்வாதிகளினால் வெளியிடப்பட்டன.

இவ்வாறு வெளியிடப்பட்ட அறிக்கைகள் யாவும் முற்றிலும் தவரானவை எனவும் ஆதாரமற்றவை எனவும் நாங்கள் மீண்டும் உறுதி செய்கின்றோம்

திருத்தந்தையின் வருகையையும் அருளாலர் ஜோசவ் வாஸ் அடிகளாரின் புனிதர் நிலைக்கு உயர்த்தும் சடங்கையும் ஆவலோடு காத்திருக்கும் கத்தோலிக்க மக்கள் உட்பட அனைத்து இலங்கை வாழ் மக்களினதும் உற்சாகத்திற்கு பங்கம் விழைவிப்பதே இவர்களது நோக்கம்.

திருத்தந்தையின் இலங்கை விஜயம் தெடர்பான உத்தியோகப்பூர்வ செய்திகளை வெளியிடும் முழு உரிமை இலங்கை கத்தேலிக்க ஆயர் சங்கத்திடமும் திருத்தந்தையின் இலங்கை விஜயத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள ஊடக அலுவலகத்திற்கும் மட்டுமே உரியது என மீண்டும் உறுதி செய்கின்றோம். இது தொடர்பான முடிவுகளையோ அறிக்கைகளையோ வெளியிட வேறு எந்த தனி நபருக்கும் அங்கிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே வெவ்வேறு ஊடகங்களினால் வெளியிடப்படும் இத்தகைய பொய்யான அறிக்கைகளை நம்பவோ அவற்றினால் தவராக வழிநடத்தப்படவோ வேண்டாம் என்று கத்தோலிக்க மற்றும் அனைத்து மக்களிடமும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இரு முன்னனி ஜனாதிபதி வேட்பாளர்களும் இலங்கை கத்தேலிக்க ஆயர் சங்கததை சந்தித்து, தேர்தல் முடிவுகள் எத்தகையதாய் இருப்பினும் திட்டமிட்டப்படி திருத்தந்தையின் இலங்கை விஜயம் தெடர்பான செயற்பாடுகளுக்கு தங்கள் பூரண ஒத்துழைப்பை தருவதாக உறுதி அளித்துள்ளனர். இரு வேட்பாளர்களும் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என நாங்கள் நம்புகின்றோம். ஆகவே உள்நோக்கங்களுடன் தனி நபர்களினால் வெளியிடப்படும் இத்தகைய வதந்திகளை நம்பவேண்டாமென நாம் மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

திருத்தந்தை அவர்கள் ஜனவரி மாதம் 13ம் திகதியிலிருந்து 15ம் திகதி வரை இலங்கை விஜயத்தை மேட்கொள்ளுவார் என்பதனை நாம் மீண்டும் உறுதிசெய்வதோடு அதற்கான ஏற்பாடுகள் யாவும் மும்முறமாக எதுவித தடையுமின்றி முன்னெடுத்துச்செல்லப்படுகின்றன என்றும் நாங்கள் அறியத்தருகின்றோம்.

**அருட்தந்தை. சிறில் காமினி பிர்னாந்து**
**இயக்குனர்**
**தகவல் மற்றும் ஊடக செயலகம் – திருத்தந்தையின் இலங்கை விஜயம் 2015**

# திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகையால் முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ் முனியோர் புனிதராக உயர்த்தப்படும் திருப்பலி



## 2015 தை 14 ம் திகதி காலை 8.30 மணிக்கு கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பமாகும்.

இத்திருப்பலியின் போது இலங்கை கத்தோலிக்க திச்ருச்சபையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாக முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ் முனியோரை புனிதராக உயர்த்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இத்திருப்பலியில் கலந்து சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

13ம் திகதி மாலை 5.00 மணியிலிருந்து காலி முகத்திடலுக்கு விசுவாசிகளான உங்களுக்கு செல்ல முடியும். பங்கு பெறும் அனைவரும் பாதுகாப்புப் படையி-னரால் பரிசோதிக்கப்படுவதால் அதற்குரிய வாயில்கள் ஊடாகவே உட்செல்ல முடியும். கால தாமதத்தை தவிர்க்க முன்கூட்டியே வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையின் பல இடங்களிலிருந்தும் திருப்-பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கான விசேட புகையிரதம் மற்றும் பேருந்து சேவைகள் பற்றி பங்குத் தந்தையிடம் கேட்டு அறிந்து கொள்ளவும். வாகன உட்பிரவேச பத்திரத்தையும் பங்குத்தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம். திருப்பலியில் பங்கு பற்றும் விதமாக மரியாதையான ஆடை அணிந்து வரவும். உங்களுடைய உணவு, பானம் போன்றவற்றை கொண்டு வரமுடியும். மேலும் வாங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் முதலுதவி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. திருப்பலியில் முழுமையாக பங்கு பற்றி செபங்கள், பாடல்கள் போன்றவற்றை சத்தமாக பக்தியோடு சொல்லவும் கேட்டுக் கொள்கின்றோம்.

முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ் முனி-யோரை புனிதராக அறிவிக்கும் மடல் வாசிக்கப்பட்ட பின்பு கைதட்டி மகிழ்ச்சியை தெரிவிக்கவும். மேலும் ஆலய மணிகளும் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருப்பலியின் முன்னரோ, பின்னரோ திருப்பலி பீடத்தின் அருகாமைக்குச் செல்ல அனுமதி இல்லை என்பதால் அங்கிருக்கும் திருச்சுருபத்தை தொட்டு வணங்க முயற்சி செய்ய வேண்டாம். காணிக்கை பவனியின் போது எமது தேவாலயங்களில் சேகரிக்கப்பட்ட நன்கொடை திருத்தந்தைக்கு அளிக்கப்படும்.

புனித யோசேவ்வாஸ் முனியோரின் திருப்பண்டம் பவனியாக எடுத்துச் செல்லப்படும். அதாவது அவரது திருப்பண்டமாக அவர் பாவித்த திருச்சிலுவை எடுத்துச் செல்லப்படும். தற்போது அது கல்கமுவ புனித யோசேவ்வாஸ் திருத்தலத்தில் உள்ளது.

திருப்பலி முடிந்த பிறகு பாப்பரசர் அவ்விடத்தை விட்டு வெளியறிய பின்னரே மக்களுக்கு வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும். அதுவரை பொறுமையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். திருப்பலியில் உதவும் பிள்ளைகள் பெற்றோருடனோ அல்லது பொறுப்பாளர்களுடனோ வந்து போக இருப்பதால் திருப்பலி முடிந்தவுடன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அருட்தந்தை சிசிலி ஜோய்**
**பாப்பிறை திருவழிபாட்டுக்கான பொறுப்பாளர்.**

# தமிழ் மண்ணில் முதற் தடவை காலடி பதிக்கும் வரலாற்று நாயகர் திருத்தந்தை பிரான்சிஸின் வருகை பற்றிய மக்களின் எதிர்பார்ப்பு

இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் அதிலும் சிறப்பாக மன்னார் மறைமாவட்டத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். திருத்தந்தை பிரான்சிஸ் மடுத்திருத்தலத்தில் கால் பதிக்கும் 2015ம் ஆண்டு தைத் திங்கள் 14ம் நாள். திருத்தந்தையின் மடு வருகையை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத் திருச்சபை ஏனைய மறைமாவட்டங்களோடு இணைந்து பல்வேறு ஆயத்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. பல்வே துறைகளுக்கும் உபகுழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் குருக்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இடம் பெற்று வரும் ஆயத்தங்கள் தொடர்பாக பல்வேறு ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையின் தலைமையில் இக்கூட்டங்கள் இடம்பெற்று அறிக்கைகள் பெறப்பட்டு ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலத் தொடர்ச்சியான மழை காரணமாகவும், பாதைகளின் ஒவ்வொரு மருங்கிலும் நீர் வெள்ளமாகப் பாய்ந்ததின் காரணமாகவும் இவ் ஆயத்த முயற்சிகளில் ஓர் ஸ்தம்பித நிலை தோன்றினாலும் புத்தாண்டு புலர்ந்ததின் பின் ஏற்பட்ட புது விடியலின் காரணமாகவும் வீதிகள் உடனடியாகச் செப்பனிடும் பணியும், திருத்தந்தையை மடுப்பதிக்கு அழைத்துவரும் உலங்கு வானூர்தி வந்திறங்கும் மடுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள மைதானமும் புனரமைக்கப்படுகின்றன.

இதற்கான ஆயத்தங்கள் ஒருபுறம் நடைபெற மறுபுறம் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டுப் போட்டியிடும் இரு முக்கிய கட்சிப் பிரதிநிதிகளும் அவர்களது உதவியாளர்களின் வருகையும், ஆயரைச் சந்திக்கும் நிகழ்வும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எது எப்படி இருப்பினும் “பழையன கழிதலும் புதியன தோன்றுவதும்” புதிய ஆண்டிலே ஒருவிடயம் அந்த விதத்திலே புதிய ஆண்டிலே காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு உள்ளமும் பல எதிர்பார்ப்புக்களைத் தம்முன்னே சுமந்து கொண்டு நிற்கின்றது. புதிய ஆண்டு தோன்றிவிட்டால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் தம் வசதிக்கேற்ற வகையில் புத்தாடை வாங்குவதிலும், வீடுகளை அலங்கரிப்பதிலும், உணவுப் பண்டங்களைச் செய்வதிலும், தம்மிடம் உள்ள பணத்தை அல்லது யாரிடமாவது கடனாக வாங்கிய பணத்தை செலவிடுவர். காரணம் அவர்கள் எண்ணங்கள் ஈடேறும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அவர்களிடத்திலே இருப்பதினதலேயே ஆகும்.

இவ்வாக்கத்தை எழுதுவதற்கு முன்னர் பிறந்துள்ள புதிய ஆண்டு பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்று ஒரு சிலரிடம் வின எழுப்பினேன். எல்லோர் உள்ளங்களில் இருந்தும் விம்மலோடு தோன்றிய எதிர்பார்ப்பு விதைத்து நன்றாக வந்த பயிர்கள் இந்தத் தொடர்ச்சியான மழை வெள்ளத்தோடு அழிவடைந்து போய்விட்டது. அந்த இழப்பை எவ்வாறு ஈடுசெய்வது. மீண்டும் கடன் வாங்கி விதை நெல் விதைத்து அதன் மூலம் விளைச்சல் கிட்டுமா? திருத்தந்தை எம் மண்ணுக்கு வருகின்றார். அதன் மூலம் பாதிக்கப்பட்ட, இழக்கப்பட்ட, உடமைகள், நிலங்கள், வீடுகள் மீண்டும் எம் கைக்கு வந்து சேருமா? ஏழ்மை, வறுமை எம் மண்ணில் இருந்து ஒழிந்து போய்விடுமா? எம்மனங்களுக்கு அமைதி, சமாதானம் கிடைக்குமா? காணாமற் போனவர்கள், சிறைகளில் வாடுவோர் மீண்டும் எம்மோடு ஒன்றிணைவார்களா? போன்ற எண்ணங்களுக்கு விடை காண திருத்தந்தையின் மடுத்திருப்பதிக்கான திருப்பயணம் வழிசமைக்கும் என்ற அங்கலாய்ப்போடு ஆவலோடு அந்நாளை எதிர்பார்த்திருக்கின்றனர் மக்கள்.

அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் உலக மகாசக்தி, அன்புதான் கடவுள் என்பதைச் சுட்டிக் காட்ட திருத்தந்தை பிரான்சிஸ் எம் மண்ணுக்கு வருகை தருகின்றார்.

**இருளகற்றும் ஒளியாக, மருளகற்றும் மன்னராக**
**எனக்கென்று ஒரு மனம் அது அன்பு மனம்**
**எனக்கென்று ஒரு பாதை அது அன்புப் பாதை**
**எனக்கென்று ஒரு வாழ்வு அது அன்பு வாழ்வு**

என திருத்தந்தை வருகின்றார். அவர் நமக்குக் கொண்டுவருவது “அமைதி” அனைவரும் ஆண்டவரில் அகமகிழ்வோம். எனவே, இதனை-யொட்டி பங்குகளிலும், அன்பியங்களிலும், இன்னும் குடும்பங்களிலும் வழிபாடுகளும், செபங்களும் ஒவ்வொரு நாளும் இடம்பெற்று வருகின்றது. இறுதி மூன்று நாட்களிலும் அங்கு கூடுகின்ற இறை மக்களுக்கு திருப்பலிகள், ஆன்மீக வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இதன் மூலம் பலன் பெற்று அனைவரையும் அன்பு செய்து, மன்னித்து, மறந்து, சவாலை வெற்றி கொண்டு கிறிஸ்து அவனாக, அவளாக வாழுவோம்.



*அன்பானவர்களே,*
*எதை இழந்தாலும் துணிவை இழக்காதீர்கள்*
*தோல்வி உங்கள் முன் தோன்றிடுமாயின்*
*துவண்டு போய் உள்ளம் குழம்பிவிடாதீர்கள்*
*மேலே ஏறிடப் படிக்கட்டுத் தேவை*
*அந்தப் படிக்கட்டே இந்தத் தோல்விகளை*
*கூடுதல் திறத்துடன் கூர்ந்த நல்வாய்வுடன்*
*கடுமையாய் முயன்றிடுங்கள். ஓய்வின்றி*
*உழைத்திடுங்கள்*
*சலிப்பின்றி சவால்களை எதிர்கொள்ளுங்கள்*
*வெற்றி உங்களதே வீறுடன் செயற்படுங்கள்*

**அருட்சகோதரர். R.J. ஜெயகாந்தன்.**





சிறப்பிதழ்



இறைவனுடனும், மனிதனுடனும் கொண்டுள்ள சீரான உறவின் செயற்பாடுகளிலேயே புனித வாழ்வு தங்கியுள்ளது. வாஸ் அடிகளின் வாழ்வு முழுவதும் அயலவர் நலன் பேணுவதிலும், இறைவனின் திட்டத்தை செயற்படுத்துவதிலும் அடங்கியிருந்தது.

போர்த்துக்கேய மறைப்பணியாளரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கத்தோலிக்கம், இலங்கை ஒல்லாந்தரால் கைப்பற்றப்படும் வரையும் மிக வலுவான நிலையிலிருந்தது. எனினும், ஒல்லாந்தர் கத்தோலிக்க மறைக்கு எதிராகக் கடைப்பிடித்த கடும்போக்குக் காரணமாக கத்தோலிக்கம் இலங்கையில் முற்றாக அழியும் நிலையிலிருந்த போது வாஸ் அடிகளின் கடின உழைப்பாலும் புனிதம் நிறைந்த வாழ்வினாலும் காக்கப்பட்டு புத்தூக்கம் பெற்றது. வாஸ் அடிகள் திருச்சபைக்கு ஆற்றிய அளப்பரிய, அர்ப்பணம் நிறைந்த சேவைக்காய் இவர் 21 ஜனவரி 1995இல் திருத்தந்தை 2ஆம் ஜோன் பவுல் அவர்களால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். மேலும், 14 ஜனவரி 2015 இல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார். இவரது வாழ்வும் பணியும் எங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அவரது வாழ்வில் இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகளையும் அவை எமக்கு முன்வைக்கும் சிந்தனைகளையும், படிப்பினைகளையும் முன்வைக்கின்றோம்.

## யோசப்வாஸ் பிறப்பும், இளமைப் பருவமும்

யோசப்வாஸ் 21 ஏப்பிரல் 1651இல் கிறிஸ்ரோப்பர் வாஸ், மரிய தெ மிரண்டா என்னும் கொங்கோணி மொழி பேசும், பிராமணப் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக கோவாவிலுள்ள பெனோலிம் என்னும் இடத்தில் பிறந்தார். எளிமையான இக்குடும்பம் கத்தோலிக்கப் பாரம்பரியங்களை இறுக்கமாகக் கடைப் பிடித்தமையினால் பிள்ளைகளும் விசுவாசத்தில் உறுதி பெற்றவர்களாக வளர்ந்தனர். தந்தை ஊராகிய சாங்கோலேயில் ஆரம்பப் பாடசாலைக்கல்வியையும், புனித பவுல் கல்லூரியில் இலக்கணக்கல்வியையும் கற்று, தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பெற்ற புனித தோமஸ் அக்குவைனஸ் உயர்கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை மேற்கொண்டார். இவர் தமது 20ஆவது வயதில் குருத்துவப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து அதற்கான பயிற்சிகளைப் பெற்று 1676 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1676 முதல் 1681 வரையிலுமான காலப்பகுதியில் கோவாவில் பணியாற்றும் போதே இலங்கைக் கத்தோலிக்கரின் பரிதாப நிலைபற்றிக் கேள்வியுற்று இலங்கை செல்வதற்குத் தீர்மானித்தார்.

வாஸ் அடிகளின் வாழ்வையும், இலங்கைத் திருச்சபையின் வரலாற்றையும் முற்றாக மாற்றியமைத்த இத்தீர்மானமே வாஸ் அடிகளின் வாழ்வில் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இலங்கை சென்று பணியாற்றும் இவரது திட்டத்தை சகருருக்கள் எவரும் ஆதரிக்கவில்லை. இலங்கையில் பணி புரியக் குருக்களை அனுப்புவதற்கென கோவாவில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு வாஸ் அடிகள் சென்றார். இலங்கையில் பணியாற்ற வாஸ் அடிகள் முன்வந்தமை கோவா குருக்கள் அவைக்கு மகிழ்ச்சியளித்தாலும், இலங்கைக்கல்ல, மாறாகக் கன்னடத்திற்குச் சென்று பணியாற்றும்படி பணிக்கப்பட்டார். கத்தோலிக்க மறையைப் பொறுத்தவரையில் இலங்கையில் நிலவிய அதே அரசியற்சூழலே கன்னடத்திலும் நிலவியது. வாஸ் அடிகள் தமது ஆன்மகுருவிடம் அறிவுரை கேட்டபோது ஆன்ம குருவும் கன்னடத்திற்குச் சென்று பணியாற்றும்படி அறிவுரை வழங்கினார். கன்னடமும் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம்பனியினரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும், நிர்வாகமையம் கொழும்பிலிருந்தே செயற்பட்டது. இதனால் கன்னடத்திலிருந்து கொழும்பு செல்வதற்கு அதிக வாய்ப்புக்கிடைக்குமென ஆன்மகுரு அறிவுரை வழங்கியிருந்தார். 1681 முதல் 1684 வரையிலுமான காலப்பகுதியில் கன்னடத்தில் பணியாற்றினாலும், இலங்கை நிலவரம் பற்றியும், இலங்கை செல்வது பற்றியும் அறியக் கூடிய விடயங்களை அறிந்து கொள்வதில் வாஸ் அடிகள் கருத்தாயிருந்தார். தம்மை அடிமையாக விற்கும்படி பல தடவைகள் தம் சகருருக்களிடம் கோரிய போதும் அவரது இக்கோரிக்கை சக குருக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டது.

## ஓரற்றோறியன் சபையின் தோற்றம் இறை பராமரிப்பின் வழிநடத்தலே

இந்தியாவில் குறிப்பாகக் கோவாவில் பணியாற்றிய துறவற சபைகளில் ஐரோப்பியக் குருக்கள் மட்டுமே அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். சுதேச குருக்கள் விரும்பினாலும் இதில் இணைவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் பாஸ்கல் தெ கொஸ் ரா ஜெரேமியா என்னும் மறைமாவட்டக்குரு சுதேச குருக்கள் குழுமமாக வாழ்வதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆரம்பத்தில் மூவர் இதில் இணைந்த போதும், இம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை. எனினும், யோசப் வாஸ் அடிகள் இலங்கை செல்வதற்கு இறுதி முடிவை மேற்கொண்டிருந்தபோதும் இக்குழுவில் இணைந்து தலைமைப் பொறுப்பேற்று இதற்குப் புத்துயிர் அளித்து, புனித பிலிப்பு நேரியாரின் ஒரற்ரறியாக இதனை நிறுவினார். இவரைத் தொடர்ந்து குருக்கள் பலர் இதில் இணைந்ததால் இக்குழுமம் புதுப்பொலிவும்......

நன்றி
பாதுகாவலன்

# அருளாளர் யோசேவ்வாஸ் புனிதர் நிலைக்கு

தொடர்ச்சி 11ம், 12ம் பக்கங்களில்...



*‘நான் இங்கு சிறைப்படுத்தப்பட்டுள்ளேன். நான் சிறையிலிருந்து தப்பித்து கோவா திரும்பினால், இச்சூழலில் இங்குள்ள கத்தோலிக்கரின் நிலை என்னவாகும்’*

சிறப்பிதழ்

# அருளாளர் யோசப் வாஸ் புனிதர் நிலைக்கு




புத்தூக்கமும் பெற்றது. 1687 முதல் 1835 வரையும் இந்த குழுமத்தின் வரலாற்றை நோக்கும்போது, இது இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்தைக் காக்க இறைவனால் ஏற்படுத்தப்பட்டதாகவே தென்படுகிறது. இலங்கையில் கத்தோலிக்கம் காக்கப்பட்டமைக்கு இந்த ஒரற்றோரிக் குழுமத்தினர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும். 1687 முதல் 1835 வரை அண்ணளவாக 150 ஆண்டுகள் ஒரற்றோரியன் சபை இலங்கைத் திருச்சபைக்கு குருக்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டேயிருந்தது.

## மறைத்தூதுப் யணங்கள்




மக்களை அவர்கள்தம் கிராமங்களிலும், இல்லங்களிலும் சந்தித்து ஊக்கப்படுத்துவது மிகச்சிறந்த மறை அறிவிப்பு முறையாகும். இவ்வகையில், நற்செய்திப் பணியாற்றும் அனைவருக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் யோசப்வாஸ் அடிகள். ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களைச் சந்திப்பதில் பல ஆபத்துக்களையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப் பகுதிகளில் மாறுவேடத்தில், இரவு வேளைகளில் மட்டும் மக்களைத் சந்திக்க முடிந்தது. ஒல்லாந்த இராணுவத்தினரின் கடும் கண்காணிப்பின் மத்தியிலும் இவரது இல்லத்தரிசிப்புக்கள் இடம்பெற்றன. இவ்வாறு இவர் மேற்கொண்ட பயணங்களின்போது காடுகள், முதலைகள் நிறைந்த ஆறுகள், கரடுமுரடான பாதைகள் முதலானவற்றை வெறும் காலுடன் நடந்தே கடந்தார். ஆபத்தான விலங்குகள் நிறைந்த காட்டுப்பாதைளை நடந்து கடந்ததுடன் காடுகளிலேயே இரவையும் கழித்ததுண்டு. உடன் பயணித்த ஏனையோர் தூங்கும்போது இவர் விழித்திருந்து சாமக்காவலை மேற்கொள்வதுண்டு.

வாஸ் அடிகளால் உடன் பணியாளருக்கான ஊக்கப்படுத்தலும், வழிகாட்டலும் வழங்கியமை பற்றிக்கூறும் ஆவணக் குறிப்புக்கள் அதிகம் உள்ளன. 9 செப்ரெம்பர் 1700இல் வாஸ் அடிகள் உடன் பணியாளருடன் முதல் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். இதில் இலங்கை முழுவதும் எட்டுப் பணித்தளங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு குரு பொறுப்பாக நியமிக்கப் பெற்றார். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு குருவை பொறுப்பாக நியமித்தார். வாஸ் அடிகள் தாம் கண்டியில் தங்கியிருந்து, ஒவ்வொரு குருவையும் அவர் தம் பணித்தளத்தையும் தரிசித்து குருக்களையும் மக்களையும் ஊக்குவித்து தேவைக்கேற்ப உதவி வழங்கி வந்தார். அதன்படி வாஸ் அடிகள் கண்டி நகரை மையமாகக் கொண்டு அங்கிருந்து நாடு முழுவதும் பத்துக்கும் அதிகமான மறைத்தூதுப்பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்கள் பற்றிப் பேணியோலா அடிகள் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரண்டு தடவைகளும், கொழும்பு, நீர்கொழும்பிற்கு மூன்று தடவைகளும், மட்டக்களப்பிற்கு ஆறு தடவைகளும், திருகோணமலைக்கு ஆறு தடவைகளும், புத்தளத்திற்கு எட்டுத் தடவைகளும், மாதோட்டத்திற்கு நான்கு தடவைகளும் மறைஅறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்கள் அனைத்தும் பாத அணிகள் அற்ற நிலையில், கால்நடையாக மேற்கொண்ட பயணங்களாகும். பல பிரச்சினைகளும் சிக்கல்களும் நிறைந்த சூழலில் வாஸ் அடிகள் பல்வேறு பணிகளில் மிகக்கடினமான பணியைத் தெரிந்து கொண்டார்.

சிறந்த மறை அறிவிப்பு முறையாகக் கொள்ளப்படுகின்ற இல்லத்தரிசிப்பு, பங்குத்தரிசிப்பு என்பவற்றின் உச்சப்பயன்பாட்டை இவை சுட்டி நிற்கின்றன. அந்தந்த இடங்களிலுள்ள கிராமங்களைத் தரிசித்தமையும், மக்களைச் சந்தித்து ஊக்கப்படுத்தியமையும், ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினரின் கடும் கண்காணிப்பின் மத்தியில் இடம்பெற்றவையாகும். மக்களுடன் நெருங்கிப் பழகுவதன் மூலமே மக்களின் பிரச்சினைகளை அறிந்து, விசுவாச வாழ்வில் ஊக்கப்படுத்த முடியும் என்பதை யோசப் வாஸ் நன்கு அறிந்திருந்தார்.

“என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின் தொடர்கின்றன” (யோவா 10.:.11). இவை யேசுபெருமானின் வார்த்தைகள். மக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவதன் மூலமே அவர்களையும் அவர்கள் தேவைகளையும் அறிய முடியும். குருக்கள் தம் பணியில் மக்களைத் தரிசிப்பதும் ஆயர்கள் பங்குகளைத் தரிசிப்பதும் மிக முக்கியமான இறை அறிவிப்புப்பணியாகும்.

## தொகையிலும் மேலாக தரத்திற்கு முதலிடம் அளித்தவர்

கடும் எச்சரிக்கைகள், ஆபத்துக்கள் மத்தியில் பணியாற்றிய போதும் தாமாகவே மதம்மாற முன்வந்தோரையும் மிக நிதானத்துடனேயே ஏற்றுக் கொண்டார். மதம் மாற விரும்பியோரின் நோக்கம் தவறானது எனக் கண்டபோது அவர்களுக்கு திருமுழுக்கு அளிக்க மறுத்தார். 1703ம் ஆண்டு அறிக்கையின் படி “கண்டி அரசையும், கடலோரப் பகுதியையும் சார்ந்த எண்பது பேர் இவ்வருடம் கத்தோலிக்க மறையைத் தழுவ முன்வந்தனர். எனினும் யோசப் வாஸ் அடிகள் இவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கத் தயங்கினார். இவர்களின் உண்மை நோக்கினையும் தூண்டு-தலுக்கான காரணங்களையும் அறிந்த பின்பே திருமுழுக்களிக்கலாம் என முடிவு செய்தார்”.

## இலக்கிய ஆக்கமும் மறை அறிவு வழங்கலும்

தமிழிலும் சிங்களத்திலும் கிறிஸ்தவ இலக்கியங்களை ஆக்க வேண்டுமென வாஸ் அடிகள் நீண்ட நாட்களாகக் கொண்டிருந்த திட்டத்தை நிறைவேற்றக் கூடியவர் கொன்சால்வெஸ் அடிகளே என்பதை அறிந்து அவருக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கொன்சால்வெஸ் அடிகள் இரண்டு மொழிகளையும் கற்று சிங்கள மொழியில் 22 நூல்களையும் தமிழில் 15 நூல்களையும் எழுதினார். இந்நூல்கள் அடிப்படைச் செபங்கள், ஒழுங்கு விதிகள், விவிலிய மொழிபெயர்ப்பு, விவிலிய வினாவிடை, திருவருட்சாதனங்கள், கோட்பாடுகளுக்கான விளக்கம், கிறிஸ்துவின் பாடுகள் மரணம் பற்றிய விளக்கம், புனிதர்கள் வரலாறு, மரியன்னையின் புதுமைகள் எனப் பல விடயங்களை உள்ளடக்கியவையாகக் காணப்பட்டன. மேலும், கொன்சால்வெஸ் அடிகள் “கம்மல” என்னுமிடத்தில் 12 இற்கும் அதிகமான படியெடுப்போர் துணை கொண்டு ஒவ்வொரு நூலிலும் 200 - 300 பிரதிகள் படி எடுத்ததாக வரலாறு கூறுகின்றது. இந்நூல்கள் மறைஆசிரியர்கள் அதாவது அண்ணாவி, உபதேசி என்போருக்குப் பெரும் பயனுள்ள நூல்களாக விளங்கியிருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மேலும், வளர்ந்தோருக்கான மறை அறிவை அளிப்பதற்கும் சிறந்த கற்பித்தல் ஊடகமாக விளங்கியிருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மேலும், மக்களுக்கு மறை பற்றிய ஆழமான, பரந்த அறிவை அளிப்பது முக்கியமானது என்பதையும் இலக்கியங்கள் மறைஅறிவிப்பில் பெரும் பங்காற்ற முடியும் என்னும் கருத்தினையும் இலக்கியங்களின் ஆக்கம் எடுத்துரைக்கின்றது. யோசப் வாஸ், கொன்சால்வேஸ் அடிகளுக்கு கிடைக்காத அச்சியந்திர யுகத்தில் நாம் உள்ளதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

## மதமாற்றமும் பொருளுதவியும்

யோசப்வாஸ் அடிகள், பிறசமயத்தவர் கிறிஸ்தவ மறைக்கு மதம்மாறுவதை ஏற்றுக்கொண்ட போதும், இவர்களுக்கு எந்தவித சலுகைகளோ கொடைகளோ வழங்கி மதம்-மாற்றம் செய்யவில்லை. அவர் மேற்கொண்ட மதமாற்றச் செயற்பாடுகளுக்குச் சாதகமாய் அமைந்தது அவரது எடுத்துக்காட்டான வாழ்வும், அவர் மதபேதமின்றி மேற்கொண்ட மனிதநேயப் பணிகளுமேயாகும்.

கண்டியில் அம்மைநோய் பரவி பல உயிர்களைக் காவு கொண்டபோது, எவரது உதவியுமின்றி தவிக்க விட்டுச் சென்ற பல நோயாளரைப் பராமரித்தார். எனினும் அவர் நோய்த்தொற்றிலிருந்து காக்கப்பட்டமை பெரும் புதுமையாகவே கிறஸ்தவர்க்கும், கிறிஸ்தவரல்லாதோர்க்கும் தென்பட்டது. வாஸ் அடிகளின் புனித வாழ்வும், மனித நேயப் பணிகளுமே பலரின் மதமாற்றத்திற்குக் காரணங்களாயமைந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் பிற மதங்கள் மட்டில் கொண்டுள்ள பரந்த நல்லெண்ண மனப்பாங்கை வாஸ் அடிகள் 280ஆண்டுகளுக்கு முன்பே தம் செயற்பாடுகளால் வெளிப்படுத்தியுள்ளார்.

## சில்லாலையில் ஆபத்து - எனினும் அது ஒரு ஆசீரே

1687 யூலை முதல் சில்லாலையில் தங்கியிருந்து பல ஆபத்துக்கள் மத்தியிலும் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் 1689 இல் கிறிஸ்து பிறப்பு விழாத் தினத்தன்று கைதுசெய்யப்படும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வாஸ் அடிகள் அவசர, அவசரமாகச் சில்லாலையிலிருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணத் திருச்சபைக்கு இதுபெரும் பின்னடைவான போதும், இந்நிகழ்ச்சி இலங்கைத் திருச்சபையின் பெருவளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது. மேலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய வாஸ் அடிகள் புத்தளம் சென்று அங்கிருந்து கண்டி செல்வதற்கும், பாதுகாப்பாக கண்டியரசிலிருந்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று மறைபரப்புப் பணியை மேற்கொள்ளவும் சில்லாலையிலிருந்து வெளியேறிய நிகழ்வு வழிகோலியது.

1692இல் வாஸ் அடிகள் கண்டிக்குச் சென்றார். எனினும் கண்டிக்குச் செல்வதற்கு முன்பு கோவாவிலுள்ள தமது சபைத்தலைவருக்குக் கடிதம் அனுப்பி, தாம் தொடர்ந்து இலங்கையில் பணியாற்றுவதா? அல்லது கோவாவிற்குத் திரும்ப வேண்டுமா? இலங்கையில் பணியாற்ற வேறொருவரை நியமிக்கும் திட்டமுண்டா? எனக் கேட்டிருந்தார். ஆச்சரியமாக, சபைத்தலைவர் வாஸ் அடிகளைக் கோவா திரும்பும் படி பதில் எழுதியிருந்தார். இக்கடிதம் வாஸ் அடிகளை மிகவும் இக்கட்டான நிலைக்குத்தள்ளியது. சபைத் தலைவரின் பணிப்பை இறைவனின் சித்தம் எனக் கருதி வாஸ் அடிகள் கோவா செல்ல விரும்பினாலும் சிறைப்பட்டிருந்த காரணத்தினால் செல்ல முடியவில்லை. எனினும் சபைத்தலைவருக்கு 27 ஒக்டோபர் 1693இல் பதில் எழுதினார். இதில் “நான் இங்கு சிறைப்படுத்தப்பட்டுள்ளேன். நான் சிறையிலிருந்து தப்பித்து கோவா திரும்பினால், இச்சூழலில் இங்குள்ள கத்தோலிக்கரின் நிலை என்னவாகும்” எனக் கேட்டிருந்தார்.

கண்டி மன்னன் விமல தர்மசூரியன் வாஸ் அடிகளைச் சிறைப்படுத்தியது. இலங்கைத் திருச்சபைக்கு கிடைத்த மறைமுகமான ஆசீரே. சிறைப்படுத்தப்படாதவிடத்து சபைமுதல்வர் பணிப்பை ஏற்று சென்றிருப்பார். வாஸ் அடிகள் கோவா சென்றிருந்தால் இலங்கைத் திருச்சபையின் நிலை எப்படிப்பட்டதாக இருந்திருக்குமென எண்ணிப் பார்க்கவே முடியாது.





சிறப்பிதழ்

## இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை



இலங்கைத் திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பை வாஸ் அடிகள் மேற்கொண்ட போதும் முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதும் தம்முடனுள்ள மற்றைய குருக்களிடம் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பதுண்டு. குருக்கள் இல்லாத விடத்து பொறுப்புள்ள பொதுநிலையினருடன் கலந்தாலோசித்தார் என்பது அவருடன் வாழ்ந்த குருக்களின் சான்றாகும்.

### பொது நிலையினர் பங்களிப்பு

வாஸ் அடிகள் 1687 முதல் தனியொருவராகவே இலங்கையில் பணியாற்றினார். வாஸ் அடிகள் சிக்கலான சூழ் நிலையில் வெற்றிகரமாகப் பணியாற்றியமைக்கு பொதுநிலையினர் வழங்கிய ஒத்துழைப்பு முக்கிய காரணிகளிலொன்றாயமைகிறது.

### கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவதில் மூப்பர், அண்ணாவி ஆகியோர் பங்களிப்பு

வாஸ் அடிகளும், ஏனைய ஒரற்றோறியன் சபைக் குருமாரும் மிகக் குறைந்த எண்ணிக்கையினராய் இருந்தபோதும் சிறந்த முறையில் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கியுள்ளனர். மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மூப்பர், அண்ணாவி (உபதேசியார்) என்போரின் உதவியுடன் இக்கிறிஸ்தவ சமூகங்கள் உருவாக்கப்பட்டன. சமூக அந்தஸ்து பெற்றவர்களும் மறையில் ஆழமான பற்றுள்ளவர்களுமே இப்பணிக்கு நியமனம் பெற்றனர்.

மூப்பர் என்பவர் சமூகத்தின் (மூத்தவர்) தலைவராகவும், வழிநடத்துனராகவும், பிணக்குகளின் போது நடு நிலையாளராகவும் செயற்பட்டார். அண்ணாவி (உபதேசியார்) என்பவர் வழிபாடுகளின்போது குறிப்பாக ஞாயிறு தினங்களில் வழிபாட்டை ஒழுங்கு செய்தல், நோயாளருக்காகச் செபித்தல், இறந்தோரின் அடக்கச் சடங்கை நடத்துதல், மறைக்கல்விப் பாடங்களைக் கற்பித்தல், ஆலயங்கள் (கொட்டில் ஆலயங்கள்) உள்ள இடங்களில் அவற்றின் கண்காணிப்பாளராகப் பணியாற்றல் முதலான கருமங்களை ஆற்றி வந்தார். யோசப் வாஸ் அடிகளும் ஏனைய ஒரற்ரோறியன் சபைக் குருமாரும் தங்கள் பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தவும் படிப்படியாக கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கவும் மூப்பர், அண்ணாவி என்பவர்களின் பணிகள் பெரும் உதவியாயமைந்தன. மக்களும் இவர்களைத் தம் தலைவர்களாக ஏற்று ஒத்துழைப்பு வழங்கி, மதிப்பளித்தனர். இவர்கள் குருக்களாலும், மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்கள் என்பது முக்கியவிடயமாகும். இந்த நடைமுறை போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே வழக்கிலிருந்துள்ளது. வாஸ் அடிகள் சில்லாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூப்பரின் கண்காணிப்பில் விடப்பட்டமை இதனை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் வாஸ் அடிகள் சில்லாலையில் தங்கிப் பணியாற்றிய போது அவரது பாதுகாப்பு, அண்டைய கிராமங்களுக்கு அவரது பணியை ஒழுங்கு செய்வது, தேவைகளைக் கவனிப்பது ஆகிய பொறுப்புக்கள் மூப்பரிடம் ஒப்படைக்கப்பட்டன. வாஸ் அடிகளும் மூப்பரின் அறிவுரையின்படி நடந்து கொண்டார். சில்லாலையைப் போன்று ஏனைய இடங்களிலும் இதே நடைமுறையே வழக்கிலிருந்திருக்குமெனக் கொள்ளலாம். குருக்கள் பொதுநிலையினருடன் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதன் முக்கியத்துவத்தையும் பொதுநிலையினரும் ஆக்கபூர்வமான முறையில் பொறுப்புக்களை ஏற்பதுடன், குருக்களின் பணிகளில் பங்குகொள்ள வேண்டியதன் தேவையையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

### மக்கள் புகலிடம் அளித்தல்

வாஸ் அடிகளும், ஏனைய குருக்களும் மறைத்தூதுப் பயணங்களை மேற் கொண்டபோது ஒல்லாந்த அதிகாரிகளின் பல எச்சரிக்கைகள், உயிர் ஆபத்துக்கள் தண்டனைகள் என்பனவற்றிற்கு மத்தியில் அந்தந்த இடங்களில் வாழ்ந்த மக்களே தங்கள் குடிசைகளில் இவர்களை ஏற்று, புகலிடம் வழங்கி, கண்காணித்துள்ளனர். ஒல்லாந்த அதிகாரிகளின் எச்சரிக்கைகள் மத்தியிலும் மக்கள் வழிபாடுகளில் பங்கு கொண்டு கத்தோலிக்கர்களாக வாழ்ந்தனர்.

### யோண் வழங்கிய ஆறுதல் பணி

பயணத் துணைவராக மட்டுமன்றி இறுதி வரையும் வாஸ் அடிகளுக்கு எல்லா வேளைகளிலும் உதவி வழங்கியதோடு, அடிகளார் கடும் நோயுற்ற வேளையிலும் உடனிருந்து பராமரித்தவர் பிரமாணிக்கமுள்ள ஊழியன் யோண். இவர் வழங்கிய உதவி காலத்தால் என்றும் மறக்கப்பட முடியாதது. இவருக்கும் வாஸ் அடிகளுக்குமிடையே நிலவிய உறவை எஸ்.ஜி.பெரேரா அடிகள் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார். "அவரது பிரமாணிக்கமான பணியாளன் யோணை அவர் தனது சொந்தச் சகோதரன் போல நடத்தி வந்தார். கோவாவிற்கு எழுதும் மடல்களில் எல்லாம் அவரைப் பற்றி விசாரித்து எழுதுவார். தனது சகோதரன் யோண் வாஸ் என்றே அவனை அழைப்பார். ஏனென்றால் அவர் அவனுக்குத் தனது குடும்பப் பெயரையே அளித்திருந்தார்". இவ்வாறாக பொது நிலையினரின் பங்களிப்பு வாஸ் அடிகளின் பணி சிறக்க உதவியுள்ளது.

## பணிக்குக் களங்கம் பதவி ஏற்க மறுப்பு

வாஸ் அடிகளின் இலங்கைக்கான வருகையின் 200ஆவது வருட நிறைவை முன்னிட்டு இலங்கை அரசினால் முத்திரை வெளியிடப்பட்டது. இம்முத்திரையில் இடம்பெற்ற ஓவியத்தில் வாஸ் அடிகளின் அருகே ஆயருக்குரிய செங்கோலும், ஆயர்கள் அணியும் முடியும் காணப்படுகின்றன. இந்த ஓவியம் சுட்டும் பொருள் என்ன? 1703 நவம்பர் பாண்டிச்சேரியை அடைந்த பேராயர் சாள்ஸ் தெ ரூணன், வாஸ் அடிகளிடமிருந்து, அவரதும், ஒரற்ரோறியன் சபையினதும் பணிகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியதுடன், வாஸ் அடிகளை இலங்கைக்கு ஆயராக நியமனம் செய்வதற்கும், அவர் விரும்பாத நிலையில் அவரால் முன் மொழியப்படும் வேறொரு குருவை நியமனம் செய்வதெனவும், இது பற்றி வாஸ் அடிகளின் கருத்தைத் தெரிவிக்கும் படியும் கோரியிருந்தார். பேராயரின் மடலுக்கான பதிலை வாஸ் அடிகள் 26 யூலை 1706 இல் அனுப்பியிருந்தார். இதில் இலங்கை மிசன் பற்றிய தகவல்களை வழங்கிய போதும் ஆயர் நியமனம் பற்றிய விடயம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இவ்வாறு இது பற்றிய கருத்துத் தெரிவிக்காமைக்கு வலுவான காரணங்களுண்டு

1. தாழ்ச்சியை அதிகம் விரும்பிய வாஸ் அடிகள் ஆயர் பதவியுடன் இணைந்த புகழையோ, கௌரவத்தையோ விரும்பவில்லை.
2. வாஸ் அடிகள் ஏன் வேறொரு குருவின் பெயரை முன் மொழியவில்லை. ஏனெனில் இலங்கையில் பத்துருவாதோ - விசுவாசப் பரம்புதல் சபை முரண்பாடுகள் தோன்றி இலங்கைத் திருச்சபைக்குப் பெரும் பின்னடைவை ஏற்பட்டிருக்குமென மதி நுட்பத்துடனும் முன்னோக்குடனும் சிந்தித்துக் கருத்துக் கூறுவதை தவிர்த்திருந்தார். 1681 - 1684 வரையிலுமான காலப்பகுதியில் கன்னடத்தில் பணியாற்றிய போது இவ்வுண்மையை நன்கு அறிந்திருந்தார். இதனை, பத்துரு வாதோ - விசுவாசப் பரம்புதல் சபை முரண்பாடுகளின் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளலாம்.

## சிங்கள பௌத்த மன்னர்களின் ஆதரவு

சிங்கள, பௌத்த மன்னர்களான விமலதர்மசூரியன் (1687 - 1706), ஸ்ரீ நரேந்திர சிங்க (1739 - 1747) ஆகிய இருவரும் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவு, மற்றும் உதவிகள், 1692 - 1746 வரையிலுமான காலப்பகுதியில் கண்டி அரசு வழங்கிய புகலிடம் என்பன வாஸ் அடிகளுக்கும், ஏனைய ஒரற்ரோறியன் குழுமக் குருமாருக்கும் பெரும் உதவியாகயமைந்தன. 1697 - 1698 காலப்பகுதியில் அம்மை நோய் வேகமாகப் பரவிப்பல உயிர்களையும் காவுகொண்ட வேளையில் யோசவ்வாஸ் அடிகளும் அவரது மருமகன் கர்வாலோ அடிகளும் ஆபத்தான வியாதி என்பதை நன்கு அறிந்தும் நோயாளருக்கு உதவியமை மன்னனுக்கும் மக்களுக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. குருக்களின் பிறரன்புச் சேவை மனித அறிவினால் புரிந்து கொள்ள முடியாத தியாகமாயமைந்தது. கண்டியில் கடும் வரட்சியின் போது இடம்பெற்ற ஆச்சரியமான மழை பற்றியும் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

## கிறிஸ்தவமல்லாத மதங்களும், வாஸ் அடிகளும்

யோசப்வாஸ் அடிகள் பிறமதங்கள் மட்டில் பெருமதிப்புடனும், மனித நேயத்துடனும் நடந்து கொண்டார். சுதேச மதத்துடனோ, மக்களுடனோ முன் தொடர்பற்ற நிலையில் ஆசிய மக்கள் பற்றிய தவறான கருத்தியலின் பின்னணியிலேயே போர்த்துக்கேயக் குருமார் தம் பணியை மேற்கொண்டனர். எனினும், வாஸ் அடிகள் கத்தோலிக்க சூழல் நிறைந்த கோவாவில் பிறந்து வளர்ந்தாலும், கன்னடத்தில் பணியாற்றிய காலத்திலும், ஏனைய அநுபவங்கள் வழியும் இந்து மதத்தவர்களின் ஆன்மீகம், மதப்பற்று, வாழ்க்கை முறைபற்றி நன்கு அறிந்திருந்ததால் அம்மக்களின் உணர்வுகளை மதித்தார். இதனால், எல்லா மக்களாலும் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டார். பௌத்த மன்னர்கள் இவருக்கு வழங்கிய மரியாதையும், கௌரவமும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## வாஸ் அடிகளின் புனித வாழ்வு

இறைவனுடனும், மனிதனுடனும் கொண்டுள்ள சீரான உறவின் செயற்பாடுகளிலேயே புனித வாழ்வு தங்கியுள்ளது. வாஸ் அடிகளின் வாழ்வு முழு-



வதும் அயலவர் நலன் பேணுவதிலும், இறைவனின் திட்டத்தை செயற்படுத்துவதிலும் அடங்கியிருந்தது. இலங்கையில் பரிதாபநிலையில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களுக்கு பல ஆபத்துக்கள் மத்தியிலும் பணியாற்ற எடுத்துக் கொண்ட முடிவும், மக்கள் குடிசைகளை நாடிச் சென்று ஆறுதலளித்து ஊக்கப்படுத்தியமையும், கண்டியில் அன்றாடம் மக்கள் பசி தீர்க்க அரிசி வழங்கியமையும், கண்டியில் அம்மை நோயின் போது அவரது மருமகன் கர்வாலோ அடிகளும், அவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதும் இவரது மக்கள் சேவையை எடுத்தியம்பும் சில எடுத்துக்காட்டுக்கள். மேலும், கண்டியில் அதிசய முறையில் பொழிந்த மழையும், மக்களும் மன்னனும் இவர் மட்டில் உயர் மதிப்பீட்டை ஏற்படுத்தக் காரணங்களாயமைந்தன.

இவரது ஆழமான ஆன்மீகப் பற்று அவரது வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டது. திருவருட்சாதனங்களை பக்தியுடன் நிறைவேற்றுவதில் திருச்சபையில் கொண்டிருந்த பற்று, ஆன்மாக்களின் மீட்பில் காட்டிய ஆழமான ஆர்வம், அன்னை மரியாவின் மட்டில் காட்டிவந்த ஆழமான பக்தி, வாஸ் அடிகள் மேற்கொண்ட கடும் தவவாழ்வு (asceticism) என்பவை அவரது துறவு வாழவின் சாதனைகளுக்குக் காரணமாயமைந்தன. இவரிடம் விளங்கிய தவப்போக்கு இந்திய ஆன்மீகப் பாரம்பரியத்தை யும், எகிப்திய, லெபனான், சீரிய வனாந்தரங்களில் ஆரம்பித்து வளர்ச்சி கண்ட கிறிஸ்தவ ஆன்மீகப் பாரம்பரியத்தையும் உள்ளடக்கியதாக விளங்கியது. வாஸ் அடிகளின் புனித வாழ்விற்கு பலர் சான்று பகர்ந்துள்ளனர். விமல தர்மசூரியன், நரேந்திரசிம்ம என்னும் கண்டி பௌத்த மன்னர்கள், ஒரற்ரோரியன் சபையின் சக பணியாளர்கள், கல்வின் மத அதிகாரி பேரற்றோ கஸ்கோன், திருத்தந்தையின் உயர்நிலைத் தூதுவர் சாள்ஸ் தெ ருணோ, இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் எனப் பல துறையினரும் சான்று பகர்ந்துள்ளனர். இவரது புனிதமான வாழ்கையைக் கண்ட மக்கள் இவரைச் சம்மனசுச் சுவாமி என அழைத்தனர். பேராயர் சாள்ஸ் தெ ரூணேன 26 ஆகஸ்ட் 1704 இல் உரோமுக்கு அனுப்பிய அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பாண்டிச்சேரிக்கு வந்த கத்தோலிக்கரிடமிருந்துதாம் வாஸ் அடிகள் பற்றி பல ஆச்சரியமான விடயங்களை அறிந்ததாகக் கூறியுள்ளார்.

தொடர்ச்சி 15ம், பக்கம்...





சிறப்பிதழ்

# நான் கண்ட பப்பா

"அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் கர்தினால்மார் அவரை வாழ்த்தும் பொழுது ஒருவர் "ஏழைகளை மறந்துவிட வேண்டாம்" என்று கூறினாராம். அவ்வார்த்தையினால் கவரப்பட்டு, தனது பெயரை பிரான்சிஸ் என்று அறிவித்தார்."





திருச்சபையின் வரலாற்றில் மாசிமாதம் 28ஆம் திகதி 2013 ஆண்டு ஓர் அதிர்ச்சியான நாளாக அமைந்தது. அன்றுதான் 265வது திருத்தந்தையாக பணியாற்றிக் கொண்டிருந்த 16ஆம் பெனடிக்ட் தனது பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். திருச்சபை மாத்திரமல்ல அகில உலகமே அதிர்ச்சி அடைந்தது. 600 ஆண்டுகளுக்குப் பின் இத்தகைய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. 16ஆம் பெனடிக்ட் திருத்தந்தையின் இம்முடிவுக்கு என்ன காரணம் என்ற பல ஊகங்கள் முன் வைக்கப்பட்டன. காணரங்கள் ஏதுவாக இருப்பினும் திருத்தந்தை தன் பணிதனை தன்னால் தொடர்ந்தாற்ற இயலாமையினை தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு தூய ஆவியின் வழிநடத்துதலோடு தீர்க்கமான முடிவெடுத்தார். இவ்வதிர்ச்சி அலைகளோடு, புதிய நம்பிக்கையில் திருச்சபை பயணித்தது. அன்று மார்ச் மாதம் 16ஆம் திகதி 2013 திருச்சபையின் வாழ்வில் புதியதொரு வசந்தகாலம். ஆம் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த ஜோர்ஜியோ கர்தினால் பெர்காலியோ 266வது திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாளிலேயே திருச்சபையில் புதிய காற்று வீசும் என்று நம்பிக்கையை ஏற்படுத்தினார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் கர்தினால்மார் அவரை வாழ்த்தும் பொழுது ஒருவர் "ஏழைகளை மறந்துவிட வேண்டாம்" என்ற கூறினாராம். அவ்வார்த்தையினால் கவரப்பட்டு, தனது பெயரை பிரான்சிஸ் என்று அறிவித்தார். ஆம் இயேசுவைப் போல ஏழைகள் ஒதுக்கப்பட்ட மக்கள், நலிவுற்றோர்... போன்ற மக்களோடு தான் இருப்பேன் என்று சொல்லாமற் சொன்னவர் அதேபோன்று வாழ்ந்து வருகின்றார். வழமையாக முதற்தடவையாக மக்கள் முன் தோன்றும் பொழுது, ஆடம்பரமாக உடுத்திக் கொண்டுதான் வருவார்கள். இங்கே முற்றிலும் மாறாக எளிமையாக காட்சி தந்தார். இன்று வரை மிகவும் எளிமையாகவே வாழ்ந்து வருகின்றார். தான் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களை ஆசீர்வதிக்கும் முன், அவர்கள் முன்னிலையில் தனக்காக செபிக்கும்படி கேட்டதோடு தன்னை ஆசீர்வதிக்கும்படி மக்களை கேட்டுக்கொண்டு, தலை சாய்த்து மன்றாடினார். இந்தக் காட்சியைக் கண்டவர்கள், அங்கு நேரில் பார்த்தவர்கள் அனைவரும் மெய்சிலிர்த்துப் போனார்கள். உறைந்து போனார்கள். ஒரு திருத்தந்தை மக்களிடம் ஆசீர் வேண்டினார். தம் திருத்தந்தை வழமையான திருத்தந்தைக்குரிய இல்லத்தில் வசிக்காமல், எளிமையான ஓர் இல்லத்தில் வாழ்ந்து வருகின்றார். இப்படி தன் முதல் நாளிலேயே பல மாற்றங்களை ஏற்படுத்தி திருச்சபையின் வாழ்விலும், உலக வாழ்விலும புதிய நம்பிக்கையை ஊட்டி வருகின்றார். முன்னைய திருத்தந்தை தூய 23ஆம் ஜோன் எவ்வாறு 2ஆம் வத்திக்கான் சங்கத்தை கூட்டி திருச்சபையின் வாழ்வில் புத்தொளியையும் புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தினாரோ அதேபோன்று நம் தற்போதைய திருத்தந்தையும் பல மாற்றங்களை மிகுந்த சவால்களோடு மேற்கொண்டு வருகின்றார். திருச்சபையின் நிர்வாக அமைப்பில் பல காத்திரமான மாற்றங்களை 9 கர்தினால்மார்களின் துணையோடு, தூய ஆவியின் வழிநடத்துதலோடு துணிவோடு நடைமுறைப்படுத்திக்கொண்டே வருகின்றார். இது எளிதான காரியமல்ல, பல தடைகள் இருப்பினும் செவ்வனே செய்கின்றார்.

எங்கள் திருத்தந்தை முழு மனித வாழ்விலும் அக்கறை உள்ளவராக இருக்கின்றார் என்றால் அது பொய்யாகாது. மனித வாழ்வை பாதிக்கும் அணைத்து விடயங்களிலும் அக்கறை காட்டுகின்றார். திருச்சபையை வழிநடத்தும் தன் பணி வழிபாடுகளுக்கு மாத்திரம் முடங்கி விடாமல், அரசியல், போர், பொருளாதாரம், மனித நலன் மேன்பாட்டு விடயங்கள் போன்ற சகல துறைகளையும் ஊடறுத்துச் செல்கின்றார். சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டியவர்களுக்கு பயப்படாமல் சொல்லும் பாங்கு நேர்த்தியானது. துன்புறுவாரோடு தன்னை இணைத்துக் கொள்ளும் பண்பு சிறந்தது.

திருத்தந்தை அன்றாடம் கொண்டாடும் திருப்பலியின்போது சொல்லும் மறையுரைகள் அத்தனையும் ஓர் பொக்கிஷம் இறையன்பின் கருவூலங்கள் இறைவார்த்தையை உடைத்து மக்களுக்கு புரியும்படியாக எளிமையாக பேசுகின்றார். திருத்தம் தேவைப்படும் இடங்களிலே கனிவோடு மனம்மாற அழைக்கின்றார். வெறும் இறையியலை பேசுபவராக இல்லாமல் அதனை அன்றாட வாழ்வோடு பிணைத்து வாழ்வுக்கு வளம் சேர்க்கின்றார். நம் திருத்தந்தை. ஒரு வித்தியாசமான, தீர்க்கதரிசன பார்வையோடு இறைவார்த்தையை அணுகி, அதனை தியானித்து பகிர்ந்து கொள்கின்றார். சோர்ந்து போன விசுவாச வாழ்வுக்கு பசளையிட்டு உரமூட்டுகின்றார். காயப்பட்டோரின் காயங்களை தொட்டு குணப்படுத்துகின்றார். உடைந்த உள்ளங்களை பண்படுத்துகின்றார். நம் திருத்தந்தை மக்களோடு மக்களாக தன்னை அடையாளப்படுத்தும் முறை அவரை பார்க்கும், சந்திக்கும் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. ஒவ்வொரு புதன்கிழமை தோறும் வத்திக்கானில் இடம் பெறும் மறையுரையை கேட்க பல்லாயிரக்கணக்கானோர் வருவர். இவர்களை திருத்தந்தை சந்திக்கும் பவனியில் வரும்போது குழந்தைகளை தொட்டு ஆசீர்வதித்து, மக்களுக்கு கையசைத்து, அவர்களோடு அளவளாவும் விதம் தனித்துவமானது. இன்று எத்தனையோ கோடி மக்களுடைய இதயத்தை தொட்டு இருக்கின்றார். கத்தோலிக்க மக்களுடைய இதயத்தை மாத்திரம் அல்ல அனைத்து மக்களுடைய இதயத்தையும் தொட்டிருக்கிறார். இப்படியாக இவரைப் பற்றி எழுதிக்கொண்டே போகலாம். ஒரே ஒரு வேண்டுகோள், நம் திருத்தந்தையின் இலங்கை வருகையும், அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரின் புனிதர் பட்டமும் எம் இலங்கைத் திருச்சபையை புதுப்பிக்க வேண்டுமென்று மன்றாடுவோமாக. நம் திருத்தந்தைக்காக ஒவ்வொரு நாளும் மறக்காது செபிப்போம்.

**ஆக்கம்**

**அருட்தந்தை
அந்திரியாஸ் பெர்னான்டோ**





# இவர்கள் பார்வையில்

சிறப்பிதழ்



☆ **மார்த்தா ரூயிஸ் (வயது 60) :**
நம்பவே முடியவில்லை! அமைதியை ஒளியாக வீசுபவர் இவர். இலத்தீன் அமெரிக்காவுக்கு இவர் ஒரு பெரிய கொடை. இருபது நூற்றாண்டுகளாகக் காத்தி-ருந்தோம். காத்திருந்தது ஒரு நலமான காரியமாக முடிந்துள்ளது. (ஆனந்தக் கண்ணீருடன்)

☆ **அன்னா திரென்சோ – ஓவியர், வட இத்தாலி :**
சில நாட்களுக்குள்ளேயே எங்கள் இதயங்களைக் கொள்ளைக்கொண்டு விட்டார்.

☆ **மாராடோன்னா – உலகப் புகழ் கால்பந்துவீரர் :**
இறைவனின் கரம்தான் எங்கள் நாட்டிற்கு அர்ஜென்டினா நாட்டுத் திருத்தந்தையைக் கொடுத்துள்ளது.

☆ **ஜூடித் தெலோனி – அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி :**
கோவிலுக்குப் போவதை நிறுத்தியுள்ள கிறிஸ்தவர்களின் இதயத்தில் நம்பிக்கை என்ற உணர்வை, ஒளியை இவர் மீண்டும் புத்துணர்வுடன் தூண்டிவிடுவார். திருச்சபையில் நம்பிக்கை இழந்தவர்களுக்குப் புத்துணர்வு தருவார்.

☆ **பியோத்ரோ லொரெட்டி – 7 வயதுடைய இத்தாலி நாட்டுச் சிறுவன் :**
ஏழைகளை இவருக்கு ரொம்பப் பிடிக்கும். என் அப்பாவைப் போல் இனியவர் இவர்.

☆ **ஒபமா – அமெரிக்க அதிபர் :**
ஏழைகளின் பங்காளன். நம்மிடையே காயப்பட்டுள்ள நபர்களின் நண்பர். 2000 ஆண்டுகளாக உலகை உந்துசக்தியாக இயக்கும் அன்பையும், கனிவிரக்கத்தையும் தாங்கி வருகின்றார். இறைவனின் முகத்தை ஒவ்வொருவரிடமும் நாம் காண உதவுகின்றார்.

☆ **ஆமிகுவின் – நியூயார்க் நபர் :**
இயேசுவைப்போல் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, ஏழைகளுக்கு, நோயாளிகளுக்குப் பணிபுரிகின்றவர் இவர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பாதையில் நாம் நடந்தால் தவறுகளை இழைக்க முடியாது.

☆ **அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கர் :**
சமூக நீதியை மையப்படுத்தி ஒரு புது கண்ணோட்டத்தைக் கொண்டு வருவார்.

☆ **ஜான் பார்ட்டன் – கத்தோலிக்க சபையைச் சேராத ஓர் அமெரிக்கர் :**
ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள கத்தோலிக்க சபையின் மக்களுக்கு புத்துணர்ச்சியைத் தருவார்.

☆ **இந்திய திருப்பீடத்தூதர் பேராயர் சால்வாத்தோரே பென்னாக்கியோ :**
திருத்தந்தை பிரான்சிஸ் மக்களின் திருத்தந்தை என்ற பெயரைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டுள்ளார்.

☆ **கர்தினால் பிராடி – அயர்லாந்து நாட்டின் தலைமை ஆயர் :**
இறைவனின் பேரருட் கருணையில் திருத்தந்தை பிரான்சிஸ் கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையை, அவர் தெரிவு செய்துள்ள விருதுவாக்கு தெளிவாக்குகிறது.

☆ **பிரேசில் நாட்டு ஆயர் ஒருவர் :**
மேய்ப்புப் பணிக்கென தன்னை வழங்கும் ஒரு திருத்தந்தையை நாம் பெற்றுள்ளோம்.

☆ **ஜோசே இராசியானே தெ சில்வா – ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனமான குயுஞுவின் தலைமை இயக்குனர் :**
வலுவிழந்த, குரலிழந்த குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் சார்பாக, திருத்தந்தை பிரான்சிஸ் குரல் கொடுப்பார் என்று நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

☆ **ஜார்ஜ் வீகல் – வத்திக்கான் நாட்டு செய்தித்தாளில் மூத்த நிருபர்**
திருத்தந்தை பிரான்சிஸ் கிறிஸ்தவர்கள் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஊக்கப்படுத்தப் போகிறார்

☆ **இலத்தீன் அமெரிக்க நாட்டின் ஓர் ஆயர்**
16ம், 17ஆம் நூற்றாண்டுகளில் இயேசு சபையினர் தென் அமெரிக்காவில் நற்செய்தி அறிவிக்கும் பணியை நிறுவி, அமெரின்டியன் மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தனர். தென் அமெரிக்காவிலிருந்து இன்று ஓர் இயேசு சபையின் உறுப்பினர் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒரு மிகப் பொருத்தமான, மகிழ்ச்சிகரமான நிகழ்வு

☆ **மைக்கேல் டி அன்டோனியோ பத்தரிகையாளர்**
எளிதில் அணுகத் தக்கவராகவும், குறிப்பறிந்து செயல்படும் திறன்படைத்தவராகவும் உள்ளார்.

☆ **லியோனார்டோ பா:ப் இறையியலாளர்**
திருச்சபையின் எளிமைக்கும், சுற்றுச் சூழல் கொள்கைகளுக்கும் புதிய திருத்தந்தையின் தேர்வு உறுதியளிப்பதாக உள்ளது.

☆ **உரோமை நகரில் வாழும் ஒருவர்**
ஒரு குழந்தையின் பிறப்பிற்காகக் காத்திருப்பது போல ஓர் உணர்வு, ஏன் அதைவிட மேலான ஓர் உணர்வு!

***நன்றி, திருத்தந்தை பிரான்சிஸ் வைகறைப் பதிப்பகம்***

## திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய நூல்கள்







*உறவுகளுக்கிடையேயான அசைக்க முடியாத நம்பிக்கையை மையமாக வைத்து நமது திருத்தந்தை பல புத்தகங்களை எழுதியுள்ளார் அவைகளில் சில...*

☆ 1982இல் *'துறவிகளுக்கான தியானங்கள்'* என்னும் இவருடைய முதல் நூல்

☆ 1986இல் *'திருத்தூது வாழ்வு பற்றிய சிந்தனைகள்'* என்னும் நூல்

☆ 1992இல் *'எதிர்நோக்கு பற்றிய சிந்தனை'* என்னும் நூல்

☆ 1998இல் *திருத்தந்தை 2 ஆம் ஜோன் போலுக்கும் பிடல் காஸ்ட்ரோவுக்கும் இடையேயான உரையாடல்,* என்னும் இவருடைய புகழ் பெற்ற நூலை வெளியிடப்பட்டது.

☆ 2003இல் *'கல்வி பயிற்றுவித்தல், அதன் தேவையும், ஈடுபாடும்'* என்னும் நூல் கல்விக்கான புதிய அணுகுமுறையைப் புகுத்திய நூலை வெளியிட்டது.

☆ 2004இல் *'நாட்டைத் தோளில் எடுத்தல்'* என்னும் நூல்

☆ 2005இல் *'நாட்டைக் கட்டியெழுப்புதல்'*

☆ 2006இல் *ஊழலும் தீவினையும்*

☆ 2006இல் *'தற்குற்றம் நாட்டல்'* என்ற நூல்

☆ 2007இல் *'பணிபுரிவதே உண்மையான அதிகாரம் – பணிவிடை புரியவே வந்தேன்* என்ற இயேசுவின் கொள்கையை அனைவரிடமும் கொண்டும் சேர்க்கும் விதமாக அமைந்தது.

***நன்றி, திருத்தந்தை 266, வைகறைப் பதிப்பகம்***





# சிறப்பிதழ்

## 03ம் பக்கம் — திருத்தந்தை பிரான்சிஸ்

### 14.01.2015 காலி முகத்திடலில்

**முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் முனியோரை புனிதராக உயர்த்தப்படும் திருப்பலி**

7.30 : திருத்தந்தை அப்போஸ்தலிக்க தூதரகத்தை விட்டுப் புறப்படுதல் அதையடுத்து காலி முகத்திடலில் குழுமியிருக்கும் மக்களிடையே வலம் வருவார்

8.15 : கொழும்பு நகர பிதா நகரத்தின் திறவு கோல்களை திருத்தந்தைக்கு கையளித்தல்

8.30 : திருப்பலி ஆரம்பமாகும்.

: மும்மொழிகளிலும் திருப்பலி இடம்பெறும்

: திருப்பலியின்போது திருத்தந்தை மறையுரை ஆற்றுவார்

: இறுதியாக கர்தினால் நன்றியுரை நிகழ்த்துவார்

11.00 : அப்போஸ்தலிக்க தூதரகத்துக்கு செல்வார்

### மடுத்திருப்பதியில் செப வழிபாடு

11.50 : செய்தியாளர்கள் மற்றும் வழிபாட்டு ஒழுங்கமைப்பாளர்கள் வானூர்த்தியினூடாக மடுவுக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

12.00 : ஆயர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள்

2.00 : திருத்தந்தை அழைத்துச் செல்லப்படுவார்

3.15 : மடுத்திருப்பதியை வந்தடைதல்

: மன்னார் ஆயர் வாழ்த்தி வரவேற்பார்

: மக்களிடையே திருத்தந்தை வலம் வருவார்

3.50 : திருத்தலப் பரிபாலகர் திருத்தந்தையை வரவேற்பார்

: அதன்பின்னர் வரவேற்புரையை நடத்துவார்

4.00 : செப வழிபாடு

4.30 : சிற்றூண்டி அருந்தியப் பின் கொழும்பை நோக்கிப் புறப்படுவார்

6.00 : கொழும்பை வந்தடைந்து அப்போஸ்தலிக்க தூதரகத்துக்குச் செல்வார்.

### 15.01.2015

**போலவலானை 16ஆம் பெனடிக்ட் கலாச்சார கல்வி நிறுவனத்தை பார்வையிடுதல்**

7.30 : அப்போஸ்தலிக்க தூதரகத்தை விட்டுப் புறப்படுதல்

8.15 : கலாச்சார கல்வி நிறுவனத்தை வந்தடைதல்.

8.20 : கல்வி நிறுவன சிற்றாலயத்தில் அமைதியான செபமும். அதன் பின்னர் திருத்தந்தையின் ஆசீரும் இடம்பெறும்.

8.30 : விமான நிலையத்தை வந்தடைதல்

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரியாவிடை வைபவம்**

8.45 : சனாதிபதியால் வரவேற்கப்பட்டு பிரியாவிடை நிகழ்வுகள் இடம்பெறும்.

9.00 : பிலிப்பைன்ஸ் மனிலா நோக்கி விமானம் புறப்படும்.

## 04ம் பக்கம் — மரியாள் இறைவனின்

53. பேதுரு வதுக்க மாடத்திலிருந்து “Annuntio vobis gaudium magnum Habemus Papam' அதாவது “உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியை அறிவிக்கப் போகிறேன். நமக்கு திருத்தந்தை ஒருவர் கிடைத்துள்ளார்” என்று அறிவிப்பார்.
54. திருத்தந்தையாக தெரிந்தெடுக்கப்பட்டவர், திருத்தந்தையின் வெண்ணிற ஆடைகளை அணிந்து கொண்டு அங்கே தோன்றுவார்.
55. “உரோம் நகர மக்களுக்கும் உலகினர் அனைவருக்கும்” (urbi et orbi) என்ற தம் ஆசியுரையை வழங்குவார் புதிய திருத்தந்தை.
56. உலகம் முழுவதும் தற்போது கத்தோலிக்கத் திருச்சபைக்கு 69 நாடுகளில் 203 கர்தினால்கள் உள்ளனர்.
57. 2013இல் நடைபெற்ற தேர்தலில் 117 கர்தினால்களில், 2 பேர் தேர்தலில் பங்கேற்க இயலவில்லை. ஆக 115 கர்தினால்கள் மட்டுமே தேர்தலில் பங்கேற்றனர்.
58. 115 கர்தினால்களில் ஒருவர் எமது பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் ஆவார்.
59. 115 கர்தினால்களில் கர்தினால் தெலஸ்போர் டோப்போ, கர்தினால் ஆஸ்வால்டு கிராசியாஸ், கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி, கர்தினால் பசிலியோஸ் க்லீமிஸ் தொட்டுங்கல் மற்றும் கர்தினால் ஐவன் டயஸ் ஆகிய ஐவரும் இந்தியாவுக்கான கர்தினால்கள்.
60. திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்படுபவர் 115க்கு 77 வாக்குகளை பெற்றிருக்க வேண்டும் என்பதே இந்த முறை திருத்தந்தையரின் தேர்தலின் இருந்த சூழல்.
61. பங்குனி 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அன்று சிஸ்டைன் சிற்றாலயத்தில் தேர்தல் தொடங்கியது.
62. 115 கர்தினால்கள் புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுக்க ஒன்று கூடினார்.
63. புதிய திருத்தந்தையை தேர்வு செய்த கர்தினால்களுள் இந்தியாவைச் சேர்ந்த பசிலியோஸ் க்லீமிஸ் தொட்டுங்கல் என்பவரே இளம் கர்தினால் என்பது குறிப்பிடத்தக்கது.
64. சிஸ்டைன் தேவாலயத்தில் நடைபெற்ற திருத்தந்தைக்கான தேர்தலின் இரண்டாம் நாளில் ஐந்தாவது சுற்றில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கர்தினால் பெர்கோக்லியோவுக்கு கிடைத்தன.
65. உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புதிய தலைவராக 2013 பங்கு 13 அன்று தெரிவு செய்யப்பட்டார். ஆஜன்டினாவைச் சேர்ந்த கர்தினால் ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ (Jorge Mario Bergoglio)
66. சிஸ்டைன் தேவாலயத்தில் கூடியிருந்த கர்தினால்கள் தம் கரவொலி மூலம் தம் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## 10ம் பக்கம் — அருளாளர்

போர்த்துக்கேய உளவாளி என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டபோதும் உண்மைநிலை அறிந்த சிங்கள மன்னர்கள் வழங்கிய ஆதரவும், உதவியும் இவர் மக்களிடையே நன்மதிப்பைப் பெறுவதற்கு உறுதுணையாக அமைந்தன. பௌத்த மன்னர்களான விமலதர்மசூரியன் (1687-1707), நரேந்திர சிங்க (1707-1739) ஆகிய இருவரும் இறை மனிதனாக இவரை இனங்கண்டனர். இவரது மறைபரப்புப்பணி வெற்றியாமைந்தமைக்கு இதுவும் முக்கியமானதோர் காரணியாகும்.

**இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை**

இலங்கைத் திருச்சபையை வழி நடத்தும் பொறுப்பை வாஸ் அடிகள் மேற்கொண்ட போது முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது தம்முடன் வாழ்ந்த குருவிடம் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பதுண்டு குருக்கள் இல்லாத விடத்து பொறுப்புள்ள பொது நிலையினருடன் கலந்தாலோசித்தார் என்பது அவருடன் வாழ்ந்த குருக்களின் சான்றாகும். இலங்கைக்கான பயணத்தைப் பற்றித் தீர்மானிக்கும் முன்பு தம் ஆன்ம குருவிடமும், பயண வழியில் தூத்துக்குடியில் இயேசு சபைக் குருக்களிடமும், பணிக்களத்தில் சக குருக்களிடம் அபிப்பிராயம் அறிந்தமை, சில்லாலையில் மூப்பரின் வழிகாட்டலையும் பெற்றமை என்பனவும் குறிப்பிடப்பட வேண்டியன.

**நெருக்கடிவேளைத் தலைமைத்துவம்**

இலங்கையில் யோசப் வாஸ் அடிகள் பல கட்டுப்பாடுகள் மத்தியில் பணியாற்றியபோதும், அவரது பணி பெரிதும் வெற்றி பெற்றமைக்கு அவரிடம் விளங்கிய தலைமைத்துவப் பண்பு முக்கிய காரணிகளில் ஒன்றாகும். உலகத் திருச்சபை வரலாறோ, மறை மாவட்டங்களின் அல்லது துறவற சபைகளின் வரலாறோ தெளிவாக ஒரு உண்மையைச் சுட்டி நிற்கின்றன. ஆளுமைப் பலமுள்ள தலைவர்களின் நிர்வாகத்தில் மறுமலர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்பட்டவேளை பலவீனமான தலைமைத்துவத்தின் போது திருச்சபை தளர்ச்சியும், வீழ்ச்சியும் கண்டுள்ளது. திருச்சபை ஒரு நிறுவனம். எந்த நிறுவனத்தின் வளர்ச்சி-யிலும் தளர்ச்சியிலும் அதனைத் தலைமை தாங்கி முன்னெடுப்பவரின் ஆளுமை கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆயர்கள், குருக்கள், துறவிகள் மக்களை வழிநடத்தும் பணிக்குத் திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களாவர். சமூகமும் இவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்கிறது. தலைவர்களின் பல்வேறு நிலைகளை நோக்கும் போது சிலர் பிறப்பிலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டோராகவும் மற்றும் சிலர் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களாகவும், வேறு சிலர் நியமனம் பெற்ற தலைவர்களாகவும் காணப்படுகின்றனர். திருச்ச-பையின் தலைவர்கள் நியமனம் பெற்றவர்களாவர்.

பல இறுக்கமான கட்டுப்பாடுகள், நெருக்குவாரங்கள் மத்தியில் மாறுவேடத்தில் இலங்கைக்குள் நுழைந்து, சிறந்த பணியாற்றிய வாஸ் அடிகள் நியமனம் பெற்ற தலைவருமல்ல தெரிவு செய்யப்பட்ட தலைவருமல்ல மாறாக இயலபிலேயே தம்மில் தலைமைப் பண்புகளைக் கொண்டவர். இலங்கையில் நிலவிய சிக்கலான சூழ்நிலை பற்றியும், இலங்கைக் கத்தோலிக்கரின் பரிதாப நிலை பற்றியும் பலர் அறிந்தபோதும் எவரும் ஆபத்தான முடிவெடுத்து இலங்கைக் கத்தோலிக்கருக்கு உதவ முன்வரவில்லை. இந்நிலையிலேயே வாஸ் அடிகள் இப்பாரிய பொறுப்பை ஏற்றுச் செயற்படுத்தினார். “நல்ல ஆயன் நானே, நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பார்.” (யோவான் 10:11) என்னும் கிறிஸ்து பொருமானின் வார்த்தைக்குப் பொருள் வழங்க முன்வந்தார். இதனால் வாஸ் அடிகளை ஒரு தனித்து வமான தலைவர் எனக் கொள்வதே பொருத்தமானது.

## நிறைவுரை

ஏழைகள், பாவிகள், பிணியாளர் மட்டில் அதிக அக்கறை காட்டுவதும், அவர்களைத் தேடிச் செல்வதும், அவர்கள் சார்பாகச் செயற்படுவதும் இயேசு எடுத்த தீர்மானம், அவரது வாழ்வில் அவர் எடுத்த இரண்டாவது முக்கிய தீர்மானம் இது என்பது கிறிஸ்துவியலாளரது கருத்து. இவ்வாறே வாஸ் அடிகள் இலங்கை சென்று அங்கு ஒடுக்கப்பட்டவர்களாகப் பரிதாப நிலையிலுள்ள கத்தோலிக்கருக்கு உதவுவதென மேற்கொண்ட தீர்மானம் அவரது வாழ்வின் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இத்தீர்மானத்திற்குச் செயல் வடிவமளிக்க வாஸ் அடிகள் தூய வாழ்வு வாழ்ந்தார் என்பதற்கு பல மட்டங்களிலிருந்து சான்றுகள் முன் வைக்கப்பட்டன. அவரது வாழ்வு, சாதனைகள் நிறைந்த வாழ்வாக அமைந்தமைக்கு அவரது புனித வாழ்வே முக்கிய காரணியாகும். ஏழையாக வாழ்ந்த கிறிஸ்துவைப் போன்று தாமும் ஏழையாகவும், ஏழைகளுடனும், ஏழைகளுக்காகவும் வாழ்ந்தார். அவரது வாழ்வு முழுவதும் இதனை எடுத்தியம்புகின்றது. திருச்சபையின் புனித பணி ஏழைகளுடனும், ஒடுக்கப்பட்-டோருடனும் தம்மை ஒன்றுபடுத்துவதன் வழி வெளிப்படுகின்றது. இறைவன் ஏழையாக கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார். அதே ஏழை இயேசுவே திருச்சபையை நிறுவினார். வாஸ் அடிகள் ஏழைகளிலே கிறிஸ்துவைக் கண்டார்.

# திருத்தந்தையே உமக்கு நன்றி கூறி வாழ்த்துகின்றோம்



இந்து சமுத்திரத்தின் முத்தான சிறிய நாட்டை தரிசிக்க
வந்த இயேசுவின் பிரதி நிதியாம் திருத்தந்தையே
உமக்கு மன மகிழ்ச்சியோடு நன்றி கூறுகின்றோம்
நீர் நீடுழி காலம் வாழ்க
உமது பணி முழு திருச்சபைக்கும்
நிரம்பக் கிடைப்பதாக. விசேடமாக ஏழை எளியோர்,
ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நீர் கொடுக்கும் குரலும்,
நீர் நீட்டும் கையும் என்று நிலைப்பதாக. உமக்கு
இறையாசீர் நிரம்ப கிடைப்பதாக

# 2015 பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட புகையிரதச் சேவை

| திகதி | புறப்படுதல் | திரும்புதல் | நிலையம் | வருகை |
|---|---|---|---|---|
| 2015.01.13 | பதுளை | 17.00 | கொம்பனித்தெரு | 03.21 |
| | யாழ்ப்பாணம் | 20.00 | கொம்பனித்தெரு | 04.47 |
| | கண்டி | 00.00 | கொம்பனித்தெரு | 03.38 |
| | கண்டி | 01.00 | கொம்பனித்தெரு | 04.09 |
| | புத்தளம் | 01.00 | கொம்பனித்தெரு | 04.40 |
| | சிலாபம் | 01.30 | கொம்பனித்தெரு | 04.20 |
| | குருநாகலை | 03.50 | கொம்பனித்தெரு | 05.55 |
| | அவிசாவளை | 02.00 | கொம்பனித்தெரு | 04.30 |
| | காலி | 02.00 | கொம்பனித்தெரு | 04.20 |
| | மாத்தறை | 01.15 | கொம்பனித்தெரு | 04.35 |
| | அலுத்கமை | 02.30 | கொம்பனித்தெரு | 04.05 |

| திகதி | புறப்படும் இடம் | புறப்படும் நேரம் | | திரும்புதல் | புறப்படுதல் | இறங்கும் இடம் | புறப்படுதல் |
|---|---|---|---|---|---|---|---|
| 2015.01.13 | கொழும்பு கோட்டை | 14.00 | | | | பதுளை | 00.12 |
| | கொழும்பு கோட்டை | 14.05 | | | | புத்தளம் | 17.00 |
| | கொழும்பு கோட்டை | 14.15 | | | | கண்டி | 17.40 |
| | மருதானை | 14.25 | கொம்பனித்தெரு | 14.35 | 14.35 | மாத்தறை | 18.10 |
| | கொழும்பு கோட்டை | 14.30 | | | | யாழ்ப்பாணம் | 23.32 |
| | கொழும்பு கோட்டை | 14.40 | | | | சிலாபம் | 17.43 |
| | கொழும்பு கோட்டை | 14.45 | | | | கண்டி | 17.46 |
| | மருதானை | 14.45 | | 14.58 | 15.000 | காலி | 17.25 |
| | கொழும்பு கோட்டை | 15.00 | | | | குருணாகலை | 17.02 |
| | மருதானை | 15.55 | கொம்பனித்தெரு | 16.05 | 16.10 | அளுத்கமை | 17.46 |

**திருத்தந்தையின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு காலி முகத்திடலில் நடைபெறும் திருவழிபாட்டிற்காக இலங்கை போக்குவரத்து சங்கம், விசேட போக்குவரத்துச் சேவையை வழங்கவுள்ளது. இதுதொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் அதிகாரிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்**

| இல | அதிகாரியின் பெயர் | சேவை நிலையம் | வகிக்கும் தொழில் | தொலை பேசி இல |
|---|---|---|---|---|
| 01 | திரு. S.D.O நிமல் அனஸ்லி | இலங்கை பிரதான அலுவலகம் | நிகழ்ச்சிக்குப் பொறுப்பான அதிகாரி | 077 - 1056039 |
| 02 | திரு. திலக் விக்ரமசிங்க | கொழும்பு பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி | 077 - 1056300 |
| 03 | திரு. லலித் எட்வர்ட் | கம்பஹா பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி | 077 - 1056500 |
| 04 | திரு. திலக் விக்ரமசிங்க | கொழும்பு பிராந்தியம் | களுத்துறை பிராந்திய அதிகாரி | 077 - 1056300 |
| 05 | திரு. பண்டுக்க சுமன அங்ச | ருஹுனு பிராந்தியம் | பிராந்திய அதிகாரி - ருஹுனு | 077 - 1056800 |
| 06 | திரு. பிரியதர்ஷன | கண்டி பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி - கண்டி | 077 - 1057000 |
| 07 | திரு. ஜகத் ரஞ்சன் | சப்பிரகமுவா பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி - சப்பிரகமுவா | 077 - 1057500 |
| 08 | திரு. D.M.R திசாநாயக்க | நுவரெலியா பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி - நுவரெலியா | 077 - 1057400 |
| 09 | திரு. P.H.R.T சந்திரசிறி | வடமேற்கு | பிரதான பிராந்திய அதிகாரி - வடமேற்கு | 077 - 1057200 |
| 10 | திரு. S.K சுஜீவ த சில்வா | ஊவா பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி | 077 - 1057700 |
| 11 | திரு. U.M.A.L பர்னாந்து | ரஜரட்ட பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி | 077 - 1057900 |
| 12 | திரு. A.R.F அமீன் | கிழக்கு பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி | 077 - 1058200 |
| 13 | திரு. X. அஸ்கர் | வடக்கு பிராந்தியம் | பிரதான பிராந்திய அதிகாரி | 077 - 1058100 |